# மிஃராஜ் ஓர் அற்புதம் - வரலாறு

மிஃராஜ் என்றால் 'உயருதல்' என்று பொருள். அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த விண்ணேற்றத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறுது. இது நபிகளார் தங்கள் உடலுடன் சென்ற விண்ணேற்றம் செய்ததை குறிக்கிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மேற்கொண்ட விண்ணுலக யாத்திரையானது ஓர் அதிசய நிகழ்வாகும். இது ஓர் அற்புதமாக மாத்திரமின்றி பல தத்துவங்களையும், தாத்பரியங்களையும் தன்னகத்தே பொதிந்ததாகவும் , அடிப்படையான பல உண்மைகளை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது.

நபியவர்களது அழைப்புப் பணிக்குப் பக்க பலமாக , துணையாக, ஆறுதலாக, உற்சாகமூட்டுபவராக இருந்த இறைத்தூதரவர்களின் மனைவி அன்னை கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களும், பாதுகாப்பு அரணாக இருந்த சிறிய தந்தை அபூதாலிப் அவர்களும் ஒரே ஆண்டில் மரணமடைந்தார்கள். இவ்விருவரதும் இழப்பு நபியவர்களை வெகுவாகப் பாதித்தது. இதன் பின்னர் காபிர்களின் தொந்தரவும்,துன்புறுத்தலும் அதிகரிக்கத் தொடங்கின.

இந்நிலையில்தான் அண்ணலாரை ஆறுதல்படுத்தவும், தமது அதிசயங்களை காட்டி அவர்களை வலுவூட்டவும் அவர்களை தம்பக்கம் அழைத்தான்.

இது கி.பி. 621 இல் ஒரே இரவில் நிகழ்த்திய இரவுப் பயணம் ஆகும் . இது உடல் மற்றும் ஆன்மீக பயணம் என இரு வழிகளில் விளக்கப்படுகிறது . இந்த நிகழ்ச்சி நபித்துவத்துக்குப் பின்னர் ஹிஜ்ரத்திற்கு முன்னர் நடந்ததாகும்.

நபியவர்களின் இவ்விண்ணுலக யாத்திரை இரு பகுதிகளைக் கொண்டதாக அமைந்தது. மக்காவில் அமைந்துள்ள அல்-மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து பலஸ்தீனில் அமைந்துள்ள அல்-மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு மேற்கொண்ட பயணம் அதன் முதற் பகுதியாகும். அதனை அல்-இஸ்ரா என சொல்லப்படுகிறது.

இப்பயணத்தின் இரண்டாம் பகுதியாக நபியவர்கள் அல்-மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து வானுலகம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டமை அமைந்தது . இதுவே மிஃராஜ் எனப்படுகிறது.

மிஃராஜ் சம்பவமானது அன்றிருந்த உண்மை முஃமின்களை பிரித்தறிவதற்கும், போலிகளை இனங்காண்பதற்கும், உறுதியான ஈமானைப் பெற்றிருந்தோரையும் ஈமானில் பலவீனர்களாக இருந்தோரையும் நபிகளார் அறிந்து கொள்ளவும் துணை புரிந்தது. இவ்வுண்மையை அல்லாஹ் அல்குர்ஆனில் கீழ்வருமாறு கூறுகிறான்,



www.sufimanzil.org

وَمَا جَعَلْنَا الرُّؤْيَا الَّتِي أَرَيْنَاكَ إِلَّا فِتْنَةً لِّلنَّاسِ

'நபியே! நாம் (இஸ்ரா, மிஃராஜின் போது) உமக்குக் காட்டிய காட்சிகளை மக்களுக்கு (அவர்களின் ஈமானை அறிய) ஒரு பரீட்சையாகவே அமைத்தோம்.' (அல்குர்ஆன் 17:60)

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜிப்ரீலுடன் புராக்கின் மீதேறி முதலில் சென்ற இடம் பைத்துல் முகத்தஸுதான். இறைவனை சந்தித்து ஐம்பது வேளைத் தொழுகையை பெற்றுத் திரும்பிய நபிகளாரின் மாண்பைப் பரிசோதிப்பதற்காகவே > மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபிகளாரை திரும்பத் திரும்ப இறைவனிடம் அனுப்பி வைத்து ஐம்பது வேளைத் தொழுகையை ஐந்து வேளைத் தொழுகையாக குறைத்து வரச் செய்தார்கள். அதன்பின்தான் அவர்கள் நபிகளாரின் மாண்பினை உணர்ந்தார்கள் என்றும் ஸூபியாக்கள் கூறுகின்றனர்.

سُبْحَانَ الَّذِي أَسْرَىٰ بِعَبْدِهِ لَيْلًا مِّنَ الْمَسْجِدِ الْحَرَامِ إِلَى الْمَسْجِدِ الْأَقْصَا الَّذِي بَارَكْنَا حَوْلَهُ لِنُرِيَهُ مِنْ آيَاتِنَا إِنَّهُ هُوَ السَّمِيعُ الْبَصِيرُ

(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன் அவன் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்னும் தன் அடியாரைக் ( கஅபாவாகிய ) சிறப்புற்ற பள்ளியிலிருந்து ( வெகு தூரத்தில் இருக்கும் பைத்துல் முகத்தஸிலிலுள்ள ) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான் . அவ்வாறு அழைத்துச் சென்ற ) நாம் அதனைச்சூழவுள்ளவை சிறப்புற்று ஓங்க அபிவிருத்தி அடையச் செய்திருக்கிறோம் . நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காகவே (அங்கு) அழைத்துச் சென்றோம். நிச்சயமாக (உங்களது இறைவன் ) செவியுறுபவனாகவும் உற்று நோக்கினவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் -17-1 )

நபிகளார் மிஃராஜ் சென்றது நபிகளார் கனவில் அல்ல . மாறாக அவர்கள் தமது திருவுடலுடன்தான் மிஃராஜ் சென்றார்கள் . இதற்கு ஆதாரமாக அல்லாஹ் திருக்குர்ஆனில் மேற்கண்ட ஆயத்தில் இதுபற்றி குறிப்பிடும்போது "இறைவன் தன் அடியாரை" என்ற கூற்று இதற்கு ஆதாரமாகும்.

இது கனவாக இருந்திருப்பின் குறைசிகள் இதை மறுக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. ஏனெனில் கனவில் எதையும் காணலாம் . இறைவன் தன் திருமறையில் இதனை , "காணப்படவேண்டிய விசயமாகும் அது . அதனை மனிதர்களுக்கு ஒரு சோதனையாகவே நான் உமக்கு காண்பித்தேன் " என்று கூறியுள்ளான்.

மி்ஃராஜ் பற்றிய முழு விளக்கமும் அல்லாமா அஸ்ஸெய்யிது முஹம்மது அப்துல் காதிர் ஆலிம் அல்மல்கரி ரஹ்மத்துல்லாஹி அலை ஹி அவர்கள் குர்ஆன் , ஹதீதுகளின் கருத்துப்படி தொகுத்த வேத "நபியின் விண்ணுலகப் பயண வரலாறு " என்ற மௌலிது ஷரீ்ஃபில் தெளிவாக வர்ணனையுடன் விளக்கப்பட்டுள்ளது . அதன் தொகுப்பு:

அல்லாஹ் தன் திருமறையில் நபிகளாரை சிறப்புற்ற பள்ளியிலிருந்து ... என்று குறிப்பிடுகிறான். அதைப்பற்றி "அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள் : சங்கையான பள்ளி என்றதன் கருத்து க்ஃபத்துல்லா திருமக்காவின் பரிசுத்த கேந்திரமாகும்.

இன்னுமொரு சொல்லின்படி அபூதாலிபின் புதல்வி பாஹிதா என்று பிரசித்தி பெற்ற உம்முஹானி ரழியல்லாஹு அன்ஹாவின் வீட்டிலிருந்து தூரமான பள்ளி வரையில் அதாவது பரிசுத்தப் பட்டணம் என்று பொருள்பெற்ற பைத்துல் முகத்தஸாகும் . அது விக்கிரகங்களை விட்டு துப்புரவாக்கப்பட்டிருப்பதாலும் , பாவங்களை விட்டும் சித்தமாக்கப்பட்டிருப்பதாலுமே அங்ஙனம் பெயர் பெற்றது.

**ஜிப்ரீலுக்கு அல்லாஹ்வின் கட்டளை:**

நபித்துவத்திற்கு பத்து வருடங்களுக்குப் பின் ரஜபு மாதம் 27 திங்கள் அல்லது சனி இரவில் இப்பயணம் நிகழ்ந்தது . அல்லாஹுத்தஆலா தனது ஹபீபாகிய நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தனது பரிசுத்த சமூகத்தளவில் இராவழி நடத்திவிக்கவும், தனது மகத்துவமருவுதலெனும் ஐக்கிய ஸ்தலத்தளவில் முடுகச் செய்யவும் நாடியபோது,

ஜிப்ரீலெனும் வானவர்கோனை அழைத்து இ ஜிப்ரீலே! நீர் எழுந்து உமது கலப இ மரகத மயில்தோகை வடிவுடைய அங்கவஸ்திரங்களை அணிந்துக் கொள்ளும் . விசித்திர இறக்கைகளை அழகிய நவரத்தினங்களால் அலங்கரித்துக் கொள்ளும் . எழுபதனாயிரம் சிறகுகளும் எழுபதினாயிரம் போர்வைகளுமின்றி வெளியாக வேண்டாம். உம்முடன் மீகாயீல் , இஸ்ராபீல், இஜ்ராயீல் அலைஹிமிஸ்ஸலாமென்னும் மலக்குமார்களையும் அழைத்துக் கொள்ளும் .

உங்களில் ஒவ்வொருவருடனும் 70000 மலாயிகத்துமார்களையும் தஸ்பீஹ், தஹ்லீல் திருமந்திரத்தை மொழிந்தவர்களாக சேர்த்துக் கொள்ளும்.

இன்னும் சுவனலோகத்திற்கு சென்று நாற்பதினாயிரம் புராக்கெனும் தெய்வீக வாகனங்களிலிருந்து நெற்றியில் **"லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்"** என்ற கலிமா பொறிக்கப்பட்ட அழகிய இலட்சணமுடைய ஒரு புராக்கை தேர்ந்தெடுத்துக் கொள்ளும். அதன்பின் பூவுலகம் சென்று உம்முஹானி அவர்களின் வீட்டிற்கு சென்று அங்கிருக்கும் நபிகளாருக்கு சலாமுதை ்து உமக்கு நல்ல சன்மானம் அருள வேண்டி அழைக்கிறான் என்று சொல்லும் என்று அனுப்பினான்.

**ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் தேர்ந்தெடுத்த புராக்:**

அதன்பின் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புராக் இருக்கும் இடத்திற்கு செல்லவே அங்கு ஒரு புராக் ஊண் , குடிப்பை விடுத்து மெலிந்து வதங்கிய திரேகத்தோடு சலித்திருந்ததைக் கண்டு அதன் நாட்டத்தைப் பற்றி வனவினார்கள். அது முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருநாமத்தை ஆசை வைக்கிறேன் எனச் சொல்லவே அதைப் பிடித்தார்கள். அது கழுதையிற் பெரியதாகவும், கோவேறு கழுதையில் சிறியதாகவும், மனித முகத்தின் வடிவமாகவும், ஒட்டகையின் கால்களுடையதாகவும் இருந்தது. அதன் வாலானது மாட்டின் வால் போலும், நெற்றி இளம் பிறைப் போலும், நிறம் மயிலுக்கொப்பாகவும், உடல் உயர்ந்த மாணிக்கத்தாலும், சிரசு சுகந்த கஸ்தூரியினாலும், கழுத்து அம்பரினாலுமிருந்தன. அதன் ஒவ்வோர் காலடியின் தூரம் பார்வை எட்டும் தொலைவாகவும், இரத்தினங்கள் இழைக்கப்பட்ட பொற் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தது.

பின்பு ஜிப்ரீல் அவர்கள் புராக்குடன் இவ்வுலகிற்கு வந்து நபிகளாரின் வீட்டுக் கதவை தட்டி, ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்து புராக்கில் ஏறுமாறு கேட்டுக் கொண்டார்கள். அதற்கு நபிகளார் நீர் வலுப்பமான வஹியைக் கொண்டு வந்தீர்களா? என்று கேட்க, இல்லை, அல்லாஹுத்தஆலா உமக்கு சலாம் சொன்னான். அவனுக்கும் உமக்குமிடையில் வலுப்பமான இரகசியங்களிருப்பதற்காக அவனுடைய சங்கையான திருத்தலத்திற்கு உம்மை அழைத்து வரச் சொன்னான் என்றார்கள்.

அப்பொழுது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சகோதரரே! என்னை அழைக்கும் நாயன் என்னைக் கொண்டு என்ன செய்வான்? என்று கேட்டார்கள். அதற்கு ஜிப்ரயீல் அவர்கள் அவன் உங்கள் முந்தியோர் இ பிந்தியோர் பாவங்களைப் பொறுப்பான் என்றார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இது எனக்காக உள்ளது. ஆனால் எனது உம்மத்திற்கு என்ன தருவான் என்றார்கள். ஜிப்ரயீல் அவர்கள் உமது நாயன் கியாமத் - உலக முடிவு நாளில் உமக்கு **"ஷபாஅத்துல் குப்ரா"** என்னும் பெரிய மன்றாட்டத்தைத் தருவான். முக்கியமாக உமது சமூகத்தினரில் விசேச மன்றாட்டத்தை நீர் பொருந்தும்படி தந்தருள்வான் என்றார்கள்.

நாயகமவர்கள் ஒளு, நியமசுத்தி செய்யும்வரை பொறுத்திருங்கள் என்றார்கள். உடனே ஜிப்ரயீல், மீகாயீல் ஆகியோர் ஜம்ஜம் கிணற்றுத் தண்ணீர் அல்லது ஸல்ஸபீலென்னும் சுவர்க்கத்தின் ஆற்றுநீரை அழகிய பாத்திரம் கொண்டு அதனுடன் தூய வர்ண கன்துஸீ பட்டும் வெண்மையான ஒளியினால் ஓர் தலைப்பாகையும் கொண்டு வந்தனர்.

அதன்பேரில் நான்கு வரிகளிலிருந்தன. முதல் வரியில் **முஹம்மது ரஸூலுல்லாஹ்** - அல்லாஹ்வின் திருத்தூர். இரண்டாம் வரியில் **முஹம்மதுன் நபியுல்லாஹ்** - அல்லாஹ்வின் தீர்க்கதரிசி. மூன்றாவது வரியில் **முஹம்மது ஹபீபுல்லாஹ்** - அல்லாஹ்வின் நண்பர். நான்காவது வரியில் **முஹம்மதுன் கலீலுல்லாஹ்** - அல்லாஹ்வின் தோழர் என்று எழுதப்பட்டிருந்தன.

நாயகமவர்கள் ஒளுவை நிரப்பமாக்கி முடித்தவுடன் அவர்களிருவரும் நாயகமவர்களின் நெஞ்சைப் பிளந்து, கல்பு மனதை வெளியிலெடுத்து கழுகி அதில் நின்றும் ஒரு மாமிச துண்டை *(நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இருமுறை நெஞ்சு பிளக்கப்பட்டது. அன்னார் சிறுவயதாயிருக்கும்போது அன்னாரின் வளர்ப்புத் தாயார் ஹலீமா அம்மையார் அவர்களின் வீட்டிலிருக்கும் போது ஒருமுறையும், மிஃராஜ் செல்லும்முன் ஒருமுறையும் ஆக இருமுறை அன்னாரின் நெஞ்சு பிளக்கப்பட்டது.*

*பொதுவாக மனிதர்களின் நெஞ்சில் ஒருஇறைச்சித் துண்டு இருக்கும். அதில்தான் செய்த்தான் குடியிருப்பான். அப்பகுதியை நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களுக்கு அகற்றப்பட்டது. மாற்றுக் கருத்துடையவர்கள் சொல்வதுபோல் நாயகம் அவர்களுக்கு நெஞ்சிலிருந்து சைத்தானிய்யத்தான பகுதி வெட்டியெறியப்பட்டது என்ற கூற்று சரியல்ல. - அன்னாருடன் அன்னாருக்கு ஒவ்வாத எந்தவொரு செயல், சொல்களை ஒப்பிட்டுப் பார்ப்பது சுன்னத் வல் ஜமாஅத் அகீதா அல்ல. முஸ்லிம் ஷரீபில் வந்திருக்கும் ஹதீதுக்கு இமாமுனா தகீயுத்தீன் ஷுப்கி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வாறு விளக்கம் தந்துள்ளார்கள். அந்த மாமிசத் துண்டு கூட அண்ணலாருக்கு இருக்கத் தேவையில்லை என்று வல்ல நாயன் அதை எடுத்து அண்ணலாருக்கு சிறப்பு செய்தான் )* எடுத்து விட்டு ஹிருதயத்தை ஹிக்மத்தையும், ஈமான் - நம்பிக்கையும், சொறிந்து மனதில் அறிவையும் யகீன் விசுவாசத்தையும் நிரப்புவித்து அதைத் தைத்து இரு

புயங்களுக்கடையில் "நுபுவ்வத்" நபித்துவத்தின் முத்திரையாகிய இலாஞ்சனை தரிபித்தார்கள். அது பரிபூரண அலங்காரங்களாகிய வர்ணிக்க எவராலும் முடியாத அற்புதமாய் அதன் ஒளியினை பார்ப்போர் பிரமிக்க தக்க ஜோதியுமாயிருந்தது.

**புராக்கின் வேண்டுதல்:**

பின்பு நபியவர்களை புராக்கின் மீதேற சொன்னபோது புராக்கானது விரண்டு பின்னடைவதைக் கண்டு, ஜிப்ரீல் அதை தம் கை சைகையினால் நிறுத்தி நபியவர்களைப் பற்றி சொன்னார்கள். அதற்கு அந்த புராக், இவரே மோட்சத்திற்குரிய நபியா? இவரே புகழ்பெற்ற லிவாவுல் ஹம்து கொடியை உடையவரா? இவரே மகாமுல் மஹ்மூதென்னும் இடத்தில் மன்றாடக் கூடியவரா? என்று கேட்க, ஜிப்ரயீல் "ஆம்" என்று பதிலுறுத்தார்கள். உடனே புராக்கானது அடிபணிந்து, கருணையுள்ள நபியே எனது முதுகில் ஏறுவீர்களாக! கியாமத் மறுமைநாளில் மன்றாட்டத்தின்போது என்னுடைய பங்கை மறவாதிருப்பீர்களாக என வேண்டிக் கொண்டது.

அப்பால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புராக்கின் மீது சவாரியானார்கள். ஜிப்ரயீல் வாகன காலணியின் மீது தரிபட்டார். மீகாயீல் அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டார். இஸ்ராபீல் அதன் அங்கவஸ்திரத்தின் முந்தானைகளை செவ்வைப் படுத்துகிறவராயிருந்தார்.

புராக்கானது நாயகமவர்களை சுமந்து கொண்டு ஆகாயமார்க்கமாக பயணித்தது. சிறிது தூரம் சென்றதும், ஜிப்ரயீல் அவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இரண்டு ரக்அத் தொழச் சொன்னார்கள். இது மதீனா முனவ்வரா எனும் பட்டணம். அல்லாஹ்தஆலா நாடினால் நீர் ஹிஜ்ரத் திருயாத்திரை செல்வீர்கள் என்று சொல்லவே, நபிகளார் இரு ரகஅத் தொழுதார்கள்.

பின்பு சிறிது தூரம் சென்றதும் தூர்ஸீனா மலையில் இரண்டு ரகஅத் தொழச் சொன்னார்கள். அதன்படி நபிகளார் செய்தார்கள்.

பின்பு சிறிதுதூரம் சென்றதும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிரசவிக்கப்பட்ட "பைத்துல் லஹ்மெ "ன்ற பட்டணத்தில் இரண்டு ரக் அத் தொழுதார்கள். அச்சந்தர்ப்பத்தில் தங்களுக்கு வலப்புறத்தில் ஒரு சப்தமும், இடப்புறத்தில் ஒரு சப்தமும் கேட்டார்கள். இன்னுமொரு பெண்ணும் எதிரே வந்தாள். நாயகம் அவர்கள் அவ்விடத்தில் தரிபடாது சென்று விட்டார்கள்.

ஜிப்ரயீல் சொன்னார்கள் முந்தைய சப்தம் யூதர்களுடையது. அதற்கு நீர் விடையளித்தால் உமது சமூகத்தார் யூதர்களாகிவிடுவார்கள். பிந்திய சப்தம் நஸ்ரானிகளுடையது. அதற்கு நீர் விடையளித்தால் உமது சமூகத்தார்

கிறித்துவர்களாகிவிடுவார்கள். அந்தப் பெண்ணானவள் துன்யாவெனும் உலகமாயிருக்கும். அதற்கு நீர் முகம் கொடுத்தால் உமது சமூகத்தினர் பூவுலக மாயையில் சிக்கிக் கொள்வார்கள் என்றார்கள்.

அப்பால் நல்ல முகஇலட்சணமுடைய ஒரு வாலிபரைக் கண்டார்கள் . அவர் நாயகமவர்களுக்கு ஸலாம் சொன்னார் . நாயகம் பதில் சொன்னவுடன் இரு கண்களுக்கிடையில் முத்தமிட்டார். ஜிப்ரயீல் அவர்கள் முஹம்மதே ! நன்மாராயம் பெற்றீர். இதுதான் சன்மார்க்கம் இஸ்லாம் . உமது சமூகத்தினர் முஸ்லிம்களாய் ஜீவிப்பார்கள். மு∴மின்களாய் மரணிப்பார்கள் . அச்சமற்றவர்களாய் சுவர்க்கத்தில் புகுவார்கள் என்றார்.

**பாலைத் தேர்ந்தெடுத்த நாயகம்**

அதன்பின் மூன்று பாத்திரங்களில் தண்ணீரும் இ கள்ளும், பாலும் கொண்டு வரப்பட்டன. நாயகமவர்கள் பாலை மட்டும் எடுத்துக் கொண்டார்கள் . ஜிப்ரயீல் அவர்கள், நீங்கள் சன்மார்க்கத்தைக் கைக் கொண்டீர். தண்ணீரைப் பருகினால் உமது சமூகத்தினர் உமது சமூகத்தினர் பாவத்தில் அழிந்து போவார்கள். கல்லைக் குடிப்பின் அவர்கள் மதியற்றமூடர்களாகிவிடுவார்கள். நிச்சயமாக அது உமது சமூகத்தினர் மீது விலக்கப்பட்டு போவுமென்றார்கள் . நாயகம் அவர்கள் பாலில் கொஞ்சமே குடித்திருந்தபடியால், நீங்கள் பால் முழுவதையும் குடித்து மீதி வைக்காமலிருப்பின் உமது சமூகத்தில் யாரும் நரகத்தில் புகமாட்டார்கள் என்று சொல்லவும் , நாயகமவர்கள் அந்த மீதிப்பாலை தரும்படி கேட்டபோது , அது வெகுதூரம் ஊழ் , விதிப்படி – களாகதிர்படி கலம் எழுதுகோல் நடந்தேறிவிட்டது. அவனுடைய கற்பனை மாற்றப்படுவதில்லை. அவனுடைய தீர்ப்பை மறுப்பவன் யாருமில்லை என்று சொல்லிவிட்டார்.

**நாயகம் கண்ட காட்சிகள்:**

பின்பு சில ஜனங்களைக் கண்டார்கள் . அவர்கள் ஒரே நாளில் பயிர் விதைத்து அறுவடை செய்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் பீஸபீல் போர் செய்தவர்கள் என்று சொல்லப்பட்டது . இன்னும் சில ஜனங்களைக் கண்டார்கள் . அவர்கள் கற்பாறைகளால் தங்கள் தலைகளை அடித்து உடைத்துக் கொள்கின்றனர் . அவர்கள் தொழாமலிருந்தவர்கள் என்றும் , இன்னும் சில ஜனங்கள் தங்கள் முன் , பின்புறங்களில் அண்டைகள் சேர்க்கப்பட்டு ஐக்கூமென்னும் நரகத்தின் கொடிய நஞ்சையுடைய களிமரங்களில் துஷ்ட மிருகங்களைப் போல் மேய்ந்திருக்கிறார்கள் . அவர்கள் ஸதகா, ஜகாத்து தருமம் செய்யாத கஞ்சர்கள்.

இன்னும் சிலர் பக்கத்தில் நல்ல இறைச்சிகளும் , கெட்டுப்போன இறைச்சிகளும் வைக்கப்பட்டிருகுகின்றன. அவற்றில் கெட்டதை புசிக்கின்றனர். அவர்கள் விபச்சாரம் செய்யும் பேர்வழிகளை அடுத்தவர்கள் என்று சொல்லப்பட்டது.

இன்னுமொரு வெட்டவெளியில் ஒரு ஜனக்கும்பலை நெருங்கினார்கள். அவர்கள் ஒரு மாட்டை அறுத்து நான்காக பங்கிட்டு யஹூதிகள் அதன் கொம்பு , குளம்புகளையும், நஸராக்கள் நரம்பு சவ்வுகளையும் , மஜூஸிகள் இரத்தம் மலங்களையும் முஸ்லிமானவர்கள் அதன் இறைச்சி , பால்களையும் எடுக்கின்றனர். இன்னும் சிலர் தங்கள் உதடுகள், நாவுகளை இரும்பு, கத்திரிக்கோல்களால் தரிக்கின்றனர். அவர்கள் தாங்கள் நல் அமல் செய்யாமல் மற்றவர்களுக்கு உபதேசிக்கும் பிரசங்கிகளாகும்.

பின்பு ஒரு பெண்ணானவள் தன் மார்பைக் கொழுகப்பட்டவளாய் அவளுக்கு கீழால் நெருப்பெறிக்கப்பட்டு தன் உடலின் இறைச்சியை தானே தின்னும்படிக் கண்டார்கள் . அவள் தனது கணவனல்லாதவனுக்கு மினுக்கி சிங்காரித்தவளாம்..

இன்னுமொரு ஓடையில் இனிய குரலோசையும், மணமான வாடையும், பொருந்திய குளிர்ந்த காற்றையும் அவை சுவர்க்கத்தின் வாடையும் இராகமுமாயிருக்கும் . சுவர்க்கமானது எனது ஆண்டவனே ! நீ எனக்கு செய்த நல்வாக்கை தந்தருள் எனக்குரிய மணமாளிகைகயும், ஆடையலங்காரங்களும், சகல சௌபாக்கியங்களும் வெகு நேர்த்தியாய் இருக்கின்றன என்று சொன்னபோது , முஃமினானவர்கள், முஸ்லிமானவர்கள், சாலிஹான நல்லடியார்கள் அல்லாஹ்வுக்கு இணைவையாதவர்கள் அனைவரும் உனக்கு உண்டாயிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது.

இன்னுமொரு ஓடையில் வெறுக்கத்தக்க துர்நாற்றத்தையும் இ அருவறுக்கப்பட்ட ஊளை சப்தத்தையும் கேட்டார்கள் . அவை ஜஹன்னமென்னும் நரகத்தின் அவலட்சணமாகும். நரகமானது எனது நாயனே! நீ எனக்கு வார்த்தைப்பாடு செய்ததை தந்தருள். என்னுடைய கொடிய நெருப்பு, சங்கிலிகள் முதலிய அரிகண்டங்களும், கடின நெஞ்சுடைய பாம்பு, தேள், நட்டுவாக்களும் அதிகரித்திருக்கின்றன. நெருப்பும், ஜீவாலையும் சூடும் , பலாய் முஸீபத்துகளும் , கெட்ட சோதனைகளும் கனகுரூரமாயிருக்கின்றன எனச் சொல்ல வே எல்லா காபிர், முஷ்ரிக், யஹூதி, நஸாரா, மஜூஸிகள் முதலிய அல்லாஹ்வுக்கு இணைவைத்தவர்களும் , கேள்விக்கணக்கு நாளைக் கொண்டு நம்பிக்கைக் கொள்ளாதவர்களுமான ஆண், பெண் யாவரும் உனக்குண்டென சொல்லப்பட்டது.

பின்பு சில ஜனங்கள் இரும்பிலான தங்கள் நகங்களால் முகங்களையும் , நெஞ்சுகளையும் பிராண்டுகிறார்கள். அவர்கள் புறம் பேசி மனிதர்களின் மானம் ,

குறைகளை பங்கப்படுத்தி கீறி கிழிப்பவர்களாம். பின்பு தஜ்ஜாலை அவனுடைய வழிகேட்டிலும், அழிச்சாட்டியத்திலும் கெட்ட உருவத்திலும் கண்டார்கள்.

**பைத்துல் முகத்தஸில் நபிகளார்:**

அப்பால் நாயகமவர்கள் பைத்துல் முகத்தஸ் என்னும் பரிசுத்த பட்டணத்தளவில் போய் சேர்ந்தார்கள். அங்கு மாட்சிமைப் பொருந்திய கண்ணியமிக்க மலாயிகத்துமார்கள் மிக்க மரியாதையாகவும், சங்கையாகவும் நபியவர்களை வரவேற்று ஸலாம் சொல்லி, அன்பியாக்களுக்கு முதலும், கடைசியுமானவர்களே நுபுவ்வத் என்னும் நபித்துவத்தின் முத்திராங்கமானவர்களே ! தாங்களே உலக முடிவுநாளில் சமாதி பிளந்து வெளிக்கிளம்புவோரில் முதன்மையானவர்கள். தாங்களே உம்மத்தினர்களை கேள்வி கணக்கு நாளில் மன்றாடி இரட்சிப்போரில் முதன்மையானவர்கள் என்றார்கள்.

பின்பு பைத்துல் முகத்தஸ் பள்ளியின் வாயில் வந்ததும் ஜிப்ரயீல் அவர்கள் நபிமார்கள் தங்கள் வாகனங்களை கட்டும் இடத்தில் புராக்கை கட்டுவித்து பள்ளிக்குள் நுழைந்தார்கள்.

அங்கு தீர்க்கதரிசிகளாலும், அமரர்களாலும் நிரம்பப் பெற்ற ஒரு வரிசையைக் கண்டார்கள். அதில் தீர்க்கதரிசிகளான இப்றாஹீம், மூஸா, ஈஸா அலைஹிமிஸ்ஸலாம் அவர்களுமிருந்தார்கள். இவர்கள் எல்லோரும் நாயகமவர்களைக் கண்டதும் எழுந்து அதபு ஹுர்மத் ஒழுக்கம் மரியாதையுடன் சலாம் சொன்னார்கள்.

ஜிப்ரயீல் அவர்கள் அவர்கள் எல்லோரையும் ஒருங்கு கூடச் செய்து நாயகம் அவர்களின் முன்னிலையில் பலவரிசைகளாக அணிவகுத்து நிற்கச் செய்தார்கள். நபிகளார் இமாமாக நின்று தொழ வைத்தார்கள். நபிமார்கள் பின்னின்று மஃமூம்களாக தொழுதார்கள்.

அதை முடித்ததும், தங்களின் வரிசையான இருகரங்களையும் உயர்த்தி, அல்லாஹ்தஆலாவைப் புகழ்ந்து அவன் என்னை முன்னுண்டான நபிமார்களில் நன்மையாக்கினான். என்பொருட்டு என் சமூகத்தாரை மற்ற சமூத்தினரில் வரிசையாக்கினான். என்னை உலகத்தாருக்கு கருணையாகவும், பாவிகளுக்கு மன்றாடுபவராகவும் அனுப்பி வைத்தான். என்பேரில் குர்ஆன் வேதத்தை இறக்கினான். எனது இருதயத்தை விஸ்தீரமாக்கினான். எனது பாரத்தை இலேசாக்கினான். என்னை திக்ரு செய்வதை உயர்த்தினான். இன்னும் எனக்கு கருணையுடைய நபி என்றும், கிருபையான ரசூல் என்றும் பெயர் சூட்டினான் என துஆ பிரார்த்தனை செய்தார்கள்.

உடனே இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் எழுந்து முஹம்மதானவர் இந்த ஒரு துஆவைக் கொண்டே உங்கள் எல்லோரினும் வரிசை பெற்றார் என்றார்கள்.

**மிஃராஜ்**

பின்னர் ஜிப்ரயீல் கருணை நபியவர்களின் கரத்தைப் பற்றிக் கொண்டு கருணையுடைய வாயிலின் வெளிப்புறுத்திற்கு முன் வந்தார். அப்பொழுது மிஃராஜ் என்னும் ஏணிப்படியானது "பைத்துல் முகத்தஸ்"ஸின் பாறைகளிலிருந்து முன்வானம் வரையில் நாட்டப்பட்டிருந்தது. அதை மேலான சுவர்க்கத்திலிருந்து இஸ்மாயீலெனும் மலக்கு கொணர்ந்தார். அதன் இரு பக்கவாட்டுகளில் ஒன்று சிவந்த மாணிக்கத்தாலும் மற்றொன்று பச்சை மரகதத்தாலுமிருந்தன. வெண்மை முத்துக்களால் இழைக்கப்பட்டு அல்லாஹ்தஆலா படைத்த வஸ்துக்களிலெல்லாம் மிக அழகாயிருந்தது. அதற்கு ஐம்பத்தைந்து படிகளிருந்தன. ஒவ்வொரு படியும் 40 வருட தொலைதூரமாகும்.

ஒவ்வொரு படியிலும் மகத்தான மலாயிகத்துமார்களிலொரு கூட்டத்தினர் இருந்து பற்பல பாசைகளாலும் அல்லாஹ்தஆலாவை தஸ்பீஹ், தஹ்லீல் பரிசுத்தப்படுத்தி, தோத்திரம் செய்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு படியிலும் நாயகம் அவர்கள் ஏறிச் செல்கையில் அவர்கள் எல்லோரும் நாயகத்திற்கு மங்களவாழ்த்தும், சுபச்சோபனம் கூறி சங்கை மரியாதையுடன் சலாமுரைத்தனர். இவ்விடத்தில் இஸ்மாயீல், ருக்யாயீல், கலாயீல் என்னும் அமரர்களைக் கண்டார்கள். அவர்களுடன் பல்லாயிரம் அமரார்கள் தக்தீஸ், தஹ்லீல், பரிசுத்த திருமந்திரம் கொண்டு அல்லாஹ்தஆலாவை துதித்தவர்களாய் ஆர்ப்பரித்து, ஆனந்தக் கூச்சலிட்டார்கள். அந்த அமரர்களில் ஒருவர் பாவங்களைப் பொறுப்போனே! முஹம்மது நபியவர்களின் சமூகத்தினர்களுக்கு பிழை பொறுத்தருள் என பிரார்த்தித்தவுடன் நாயகம் எங்கள் ஆண்டவனே! நாங்கள் மறதியாகவோ, பிசகாகவோ, செய்த பாவங்களால் எங்களை குற்றம் பிடியாதேயெனக் கேட்டார்கள். இந்தப் பிரார்த்தனை யாருக்கு என்று கேட்கவே எனது சமூகத்தினர்களுக்கு என்று சொன்னார்கள்.

துர்நாற்றப் புகையினால் நிரப்பப் பெற்ற ஓர் ஓடையைக் கண்டு வினவ, அது அவாம்களின் தீயச் செய்கைகள் என சொல்லப்பட்டது. உடனே நாயகம் அவர்கள், நாயனே! அவர்களை மன்னித்தருள். அவர்கள் விசயத்தில் எனது இருதயத்தை பரிதவிக்கச் செய்யாதே எனப் பிரார்த்தித்தார்கள். உடனே ஆண்டவனின் திருச்சமூகத்திலிருந்து உமக்காக அவர்களில் மூன்றிலொரு பகுதியினரின் பாவங்களை மன்னித்தோம் என்று பதில் வந்தது. அதற்கு நாயகமவர்கள் அது போதாதென்று சொல்ல, பாதியளவு என்று ஆண்டவனின் சமூகத்திலிருந்து பதில் வந்தது. அதுவும் காணாது அவர்கள் முழுவதையும் அன்றி நான் சம்மதியேன் என்று நாயகம் அவர்கள் சொன்னதும், உம்முடைய சமூகத்தினர் அனைவருக்கும்

பிழைபொறுக்கப்படும், உமது வரிசையின் பலனாக அவர்களில் உம்மீது சலவாத்து சொன்னவரின் தகுதியை உயர்த்தினோம் என அல்லாஹுத்தஆலா சொன்னான்.

**முதல் வானத்தில்…**

பின்பு ஜிப்ரீல் அவர்கள் நாயகத்தை முன்வானம் வரை அழைத்துச் சென்று அங்கு வானத்தின் கதவைத் தட்டினார். யாரென சப்தம் வந்தது. நான் ஜிப்ரயீல். இதோ இரஸூல்மார்களுக்கு நாயகரும், மேலான அமரர்களுக்கு எஜமானருமாகிய முஹம்மதென்றவுடன் அவருக்கே சுபசோபனம் என்று வாழ்த்துடன் கதவு திறக்கப்பட்டது.

அங்கு உள்ளே நுழைந்ததும் **இஸ்மாயீல்** என்னும் அமரரை சந்தித்து அவர்களுக்கு சலாமுரைத்தார்கள். அவர் மரியாதையோடு மறுமொழி கூறினார்கள். அவ்விடத்தில் வெண்மை நிறமுடைய முத்தினாலான குப்பா மாளிகை இருந்தது. அதில் **ஆதம்**, **ஹவ்வா** அலைஹிமஸ்ஸலாம் ஆகிய இருவரும் இருந்தனர். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது வலதுபக்கத்தால் சுவர்க்கத்தையும் அதிலிருக்கும் தமது சந்ததியினரையும் பார்த்து சிரிப்பதும், இடது பக்கத்தால் நரகத்தையும் அதில் தமது சந்ததியினரையும் பார்த்து அழுவதுமாயிருந்தார்கள். அவர்களிருவருக்கும் நாயகம் அவர்கள் சலாமுரைத்தனர். அதற்கு அவர்கள் பதில் கூறி அவர்களின் இரு கண்களுக்கிடையில் முத்தமிட்டு நன்மாராயம் கூறி வாழ்த்தி போற்றி ஆசிர்வதித்தனர்.

**இரண்டாம் வானத்தில்…**

பின்பு ஜிப்ரயீல் இரண்டாம் வானம் சென்று அதன் கதவைத் திறக்கச் செய்தார். அதில் **ஜிர்ஜாயில்**, **ருக்யாயீல்** இரு அமரர்களும் ஆயிரம் அமரர்கள் புடை சூழ வெகு விமர்சையாய் குதூகலத்துடன் எதிர் கொண்டு அழைத்தனர். அங்கு **யஹ்யா**, **ஈஸா** அலைஹிமஸ்ஸலாம் ஆகிய இருவரையும் தரிசித்து அவர்கள் மீது சலாம் சொல்லவே, அவர்கள் பரிவுடன் பதிலுரைத்து நன்மை நன்கொடை கொண்டு பிரார்த்தித்தனர்.

**மூன்றாம் வானத்தில்…**

அதன்பிறகு மூன்றாம் வானம் சென்றதும், **யஃகூப்**, **யூசுப்**, **சுலைமான்**, **தாவூது** அலைஹிமிஸ்ஸலாமென்னும் தீர்க்கதரிசிகளை கண்டு சலாமுரைக்கவே அவர்கள் அன்போடு பதிலுரைத்து சுபசோபனம் கொண்டு ஆசிர்வதித்தார்கள்.

**நான்காம் வானத்தில்…**

அதன்பிறகு நான்காம் வானம் சென்று **இத்ரீஸ்** நபியைக்கண்டு சலாமுரைக்க அவர்கள் சங்கையுடன் பதிலுரைத்தார்கள். அவ்விடத்தில் ஒளியிலான நாற்காலி மீது மலக்குல் மௌத் அமரரைக் கண்டார்கள். அவரைச் சுற்றி நிறைய மலக்குகள் கும்பல் இருந்தது. அவர் தமது வலக்கையில் இருக்கும் ஒரு பலகையில் ஓயாது நோட்டமிட்டுக் கொண்டவராயிருந்தார் . அவரின் இடது பாகத்தில் மிகப்பெரிய பிரமாண்டமான விருட்சம் இருக்கிறது . அதற்கு படைப்புகளின் எண்ணிக்கைப்படி இலைகளும், பழங்களும் உண்டு . அவைகளில் மனு , ஜின்களின் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதுடன் அவர்களுக்குள்ள இரணங்கள் , சுவாசங்கள், ஆயுள்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

அவருக்கு நாயகம் அவர்கள் சலாம் சொன்னபோது எவ்வித சந்தோஷமும் இல்லாமல் பதில் சொன்னார். ஜிப்ரயீல் இவ்விதமாகவே இருக்குமாறு கியாமத் நாள் வரை அல்லாஹ் படைத்திருக்கிறான் என்றார் . நாயகம் அவர்களிடம் உயிர்களை கைப்பற்றும் விதத்தைப் பற்றிக் கேட்டார்கள் . அவர் ஒரு அடியான் தன்னுடைய ஆகாரத்தையும்இ குறிப்பிட்ட தவணையையும் சரிவர பூர்த்தி செய்து கொள்வானாயின் அவனுடைய உடம்பிலிருந்து உயிரை வாங்குவேன். அது முஃமின் நல்லடியானின் உயிராயின் அதை **“இல்லியீன்“** என்னும் சுவர்க்கத்தளவில் உயர்த்துவேன். கெட்ட பாவி உடைய உயிராயின் அதை **“சிஜ்ஜீன்“** எனும் நரகத்தளவில் எறிந்து விடுவேன் என்று சொன்னார்.

**ஐந்தாம் வானத்தில்…**

பின்பு ஐந்தாம் வானத்திற்கு உயர்ந்து அங்கு **ஹாரூன்** நபியவர்களை தலை நரைத்த, வெண்மையான நீண்ட தாடியுடையவராய் கண்டு அவருக்கு சலாம் சொல்ல அவர்கள் பதிலுரைத்து நற்சுக வாழ்வுக் கொண்டு பிரார்த்தித்தார்.

**ஆறாம் வானத்தில்…**

பின்பு 6 ஆம் வானம் சென்று அங்கு அல்லாஹ்தஆலாவின் பெரும் சேனைகளான “**கர்ரூபிய்யீன்“** என்னும் அமரர்களில் அநேகரை தரிசித்தார்கள். அவர்கள் எல்லோரும் நபியவர்களின் சமூகத்தினருக்காக பிழைபொறுக்கத் தேடினவர்களாக அழுது கொண்டிருக்கின்றனர். இன்னும் அதில் **மூஸா** நபியவர்கள் அழகிய சுத்த ஒளியிலான ஒரு நாற்காலியில் இருக்கக் கண்டார்கள். அவர் பச்சை நிறத்தையுடைய குப்பாயம் போர்வை அணிந்தவராயும் தமது “அஸா“ ஊன்று கோலின் பேரில் நின்றவர்களாகவும் இருந்தார்கள் . அவருடைய ரோமங்கள் குப்பாயத்தை கடந்து வெளியில் பின்புறமாய் வெளிப்பட்டிருந்தன . அமரர்கள் அவர்களை சந்தித்து அவர்களின் பிரார்த்தனைக் கொண்டு பரகத் வரிசைப் பெற்றுக் கொள்கின்றனர் .

நாயகம் அவர்களுக்கு சலாமுரைக்க தலைகுனிந்தவர்களாய் அதற்கு பதிலுரைத்தார்கள்.

நாயகம் அவர்கள் மூஸா நபியவர்களிடம் தலையை உயர்த்துமாறு கேட்க , அதற்கு அவர்கள் முஹம்மதே ! நான் உம்மிடம் தலையை உயர்த்த வெட்கப் படுகிறேன் . ஏனெனில் யகூதிகள் நான் உங்களை விட சிறந்தவரென சொல்லிவிட்டனர். ஆயினும் தாங்களே என்னிலும் சிறந்தவரும் இ மிகச் சங்கைவாய்ந்தவரும் ஆவீர்கள் . தங்கள் சமூகத்தினர் மிகவும் சிறப்புவாய்ந்தவர்கள் ஆவார்கள் என்றும் சொன்னார்கள்.

**ஏழாம் வானத்தில்…**

பின்பு 7 ஆம் வானத்தில் சென்று அங்கு ரூஹ் ரூஹானிய்யின் என்னும் அமரர்களை சந்தித்தார்கள். அவர்கள் நாயகமவர்களின் சமூகத்தில் பாவியானவர்களுக்கு பிழை பொறுக்க தேடுவதையும் கேட்டார்கள் . இன்னும் இங்கு படைப்புகளின் பற்பல அற்புதங்களிலும், அதிசயங்களிலும், அவற்றை சொல்ல அனுமதிக்கப்படாத , விபரித்துக் கூறமுடியாத அனேக காரணங்களை கண்ணால் கண்டு பேருவகை கொண்டார்கள்.

பின்பு அவ்விடத்தில் அந்த ஒளியினால் சதுரவடிவத்தில் பிரகாசிக்கத்தக்க **“பைத்துல் மஃமூர்“** என்னும் பள்ளியை தரிசித்தார்கள் . அதில் ஒவ்வொரு நாளிலும் எழுபதனாயிரம் மலாயிகத்துக்கள் ஹஜ் என்னும் வணக்கமும் , தவாஃபும் செய்தபின் அதன் உள்ளே புகுவார்கள். அவ்வாறு உள்ளே புகுந்தவர்கள் உலகமுடிவுநாள் வரை திரும்புவதில்லை. வெள்ளிக்கிழமை ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதில் குத்பா ஓதி உபதேசம் புரிவார்கள். அமரர்களும், தீர்க்கதரிசிகளும் அதில் ஜும்ஆ தொழுதபின் முஹம்மது நபியின் உம்மத்தினர்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றியவர்களுக்காக துஆ செய்வார்கள். இன்னும் அதில் கவுரவமிக்க தக்கமதிப்பு வாய்ந்த , அழகிய நரை இலங்கிய ஓர் விருந்தாளியை பார்த்தார்கள்.

அவர் சுவர்க்கத்தின் வாயிலிடத்தில் ஒளியினால் ஆன நாற்காலியில் உட்கார்ந்து தமது முதுகை பைத்துல் மஃமூர் பள்ளியிற் சேர்த்தவராயிருந்தார் . அவர்பக்கத்தில் சுவர்க்கத்து கன்னிக்கு ஒப்பாகிய ஒரு பெண் இருந்தார்கள் . அவர்களைப் பற்றி விசாரித்ததில் அவர்கள் இப்றாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களும் , அவர்கள் மனைவி சாரா அம்மையாரும் என்று சொல்லப்பட்டது . அவர்களுக்கு நாயகம் அவர்கள் சலாமுரைக்க அவர்கள் நாயகத்தை கட்டித் தழுவி , முத்தமிட்டு மிகுந்த நன்மைக் கொண்டு பிரார்த்தித்து ஆசீர்வதித்தார்கள்.

**நரகத்தைப் பார்வையிடல்**

பின்பு நெருப்பினால் படைக்கப்பட்ட ஓர் மலக்கை செந்தழலின் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தவராய் ஆயிரம் வருட தொலைத்தூர விஸ்தீரணத்தில் இருக்கக் கண்டார்கள். அவரைச் சூழ்ந்து பல குரூர சிந்தையும், முரட்டு சுபாவமும் பொருந்தய ஊழியரும்இ சேவகரும் இருந்தனர். இவர்தான் நரகத்தின் அதிபதி மாலிக் என சொல்லப்பட்டது. அவர்களுக்கு நாயகம் சலாம் சொல்ல அவர் பதிலுரைத்து தலையை நிமிர்த்தி ஒரு பார்வை பார்த்தார். அவர் கடின அச்சத்திற்குரியவர். பெரும் படைப்பினர். கொடிய அழுத்தம் பிடித்தவர். வெகு தத்துவம் படைத்தவர். கோபம் மேலிட்டவர். வன்னெஞ்சுடையவர். அவருடைய ஹிருதயத்தில் அறவே இரக்கமற்றவர்.

அவருடைய ஒரு பார்வை துன்யாபேரில் விழுந்தால் அதன் கொடும்துன்பத்தினால் உலகத்துடைய ஜீவகோடிகள் மாண்டு ஹலாக்காகி நாசமாகிவிடுவர். ஜிப்ரயீல் அவரை நோக்கி அல்லாஹ்வின் நண்பரளவில் பார்க்காதீர்கள் என்றார். உடனே அவர் முகத்தை திருப்பிக் கொண்டார். நாயகம் நரகத்தைக் காண்பிக்கும்படி அவரைக் கேட்டதும் அவர் தாங்கள் அதன் கொடிய தீவினைகளை நோக்க சக்தி பெற மாட்டீர்கள் என்றார். உடனே ஓர் அசரீரி மாலிகே எனது நண்பருக்கு வழிப்படும். மறுக்க வேண்டாம் என கேட்டதும் இ திரை நீக்கப்பட்டு ஓர் ஊசித்துவார இடைவெளியில் நரகவாயில் திறக்கப்பட்டது. அதில் பற்றி எரியும் அக்கினி ஜுவாலையும்இ சகிக்கமுடியாத துர்நாற்றமும் புறப்பட்டன. நரகம் கண்ணுக்கெட்டாத அளவு தொலைதூரம் கொண்ட ஏழு அடுக்கு தட்டுகளைக் கொண்டதாயிருந்தது.

அதில் ஆண்களும், பெண்களும், தேள், பாம்பு முதலிய விஷப்பிராணிகளுடன் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அந்த கொடுமையைப் பொறுக்க முடியாமல் இரட்சிப்புக் கேட்கின்றனர். நாயகம் அவர்கள் மாலிகே ! அவர்களின் பூலோக வாழ்க்கையில் உண்டான பாவதோசங்கள் என்ன ? என்று கேட்டார்கள். அவர்கள் மனிதர்களை துன்புறுத்தி அவர்களின் சொத்துக்களை அனாவசியமாகவும் , அநியாயமாகவும் பறித்துத் தின்றவர்கள் என்றார்.

இன்னும் சிலர் நெருப்புக் கட்டியை விழுங்க அது அவர்களின் பின் துவாரத்தினால் வெளிவருகின்றது. அவர்கள் அனாதைகளின் சொத்துக்களை அபகரித்தவர்கள் , இன்னும் சில ஜனங்களின் வயிறுகள் பிரமாண்டமான மலைகளைப் போல் விம்மிப் பெருததுஇ அவைகளில் நெருப்பினாலாகிய பாம்புஇ தேள்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

அவர்கள் வட்டி போன்ற ஹராமான பொருட்களைத் தின்றவர்கள். இன்னும் சிலர் தங்கள் தலைகளை நெருப்பு கற்களில் மோதி உடைக்கின்றனர். அவர்கள் மனிதர்களுக்கு நீதி வழங்குவதில் இலஞ்சம் வாங்கினவர்கள். இன்னும் சிலர் தாகித்து இரட்சிப்புத் தேடி தண்ணீரைக் கேட்க நரகத்தின் “**ஜபானிய்யாத்**“ ஊழியர்கள் வயிறெரியத்தக்க நரகவாசிகளின் சீழ் இ சலம் இவைகளை அவர்களுக்கு குடிக்க

கொடுப்பதும், அவற்றின் கொடிய வெப்பத்தினால் அவர்களின் முகத்தின் தசைகள் கழன்று விழுவதும், குடல்கள் கரிந்து கண்டதுண்டமாக்கப்பட்டு பின்துவாரத்தால் வெளிப்படுகின்றன. அவர்கள் கள்ளு, சாராயம் போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகித்தவர்கள்.

இன்னும் சிலர் உடலும், முகங்களும் பன்றிகளைப் போன்றிருக்கின்றனர். இவர்களின் இறைச்சியினை நரகத்தின் பாம்பு, தேள்கள் கொத்திப் பிடுங்கி தின்கின்றன. அவர்கள் பெருந்தொடக்கை விட்டு சுத்தமாகாமலும், குளிக்காமலும் இருந்தவர்கள்.

அதன்பின் ஜிப்ரீலை நோக்கி இதுவரை பார்த்தது போதும் என்றார்கள். உடனே மாலிக் அவர்கள் நரகத்தின் வாயிலை அடைத்து விட்டார்கள்.

அல்லாஹுத்தஆலாவிடமிருந்து முஹம்மதே ! உம்முடைய சமூகத்தினரை இத்தகைய வேதனைகளில் சிக்குண்டு வருந்தாமல் தப்பித்துக் கொள்ள அச்சமூட்டுமென்று சொல்லப்பட்டது.

**சுவர்க்கத்தில் நபிகளார்**..

அடுத்து, நாயகமவர்கள் சுவர்க்கத்திற்கு போய் அதன் வாயிலைத் தட்ட சுவர்க்கத்தின் அதிபதியாகிய ரிழ்வான் என்னும் மலக்கு வந்து கதவை திறந்து தங்களுக்கே சுபசோபனம் என்று உற்சாகமாக வரவேற்றார்கள்.

சுவர்க்கத்தின் பூமி வெற்றி பாலங்களாலும், அதன் தோப்புகள் வெண்முத்தினாலும், மலைகள் அம்பரினாலும், கோபுரங்கள் சிவந்த மாணிக்கத்தாலும், மாடமண்டபங்கள் பொன், வெள்ளியினாலும், அதன் மணல், புல்பூண்டுகள் கஸ்தூரி, குங்குமத்தாலும் அமைக்கப்பட்டிருந்தன. ஜிப்ரீல் நாயகமவர்களை அதன் உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

இருவரும் அதன் உள்ளே மிகவும் சல்லாபமாக உலாவி வந்தனர் . அவ்விடத்தில் களங்கமற்ற நீராறு, குடிப்பவர்களுக்கு ருசிகரமான மதுவாறு, சுவை மாறாத பாலாறு, கலப்பற்ற தெளிவான தேனாறு ஆகிய நான்கு நதிகள் பாய்வதைக் கண்டார்கள். அந்த நதியோரங்களில் பசும்பொன் வெள்ளியிலான பல குடிசைகளும் , கூடாரங்களுமிருந்தன. அவைகளில் சுவர்க்கப்பதியின் **“ஹூரூல் ஈன்** “ தேவகன்னிகளும், இளம்பிறை போன்ற அழகு ஜொலிக்கத்தக்க சொகுசான , முக வசீகரத்துடைய ஆண் குழந்தைகளும் இருந்தனர்.

பின்பு **“ஹவ்லுல் கவ்தர்“** என்று பெயர் சொல்லப்படும் மகா வலுப்பமான நதியைக் கண்டார்கள். அல்லாஹ்தஆலா அதை மஹ்ஷர் -மறுமையில் நபி நாயகம்

அவர்களுக்கு நன்கொடையாக அருளியிருக்கிறான். அதன் நான்கு பக்கங்களிலும் வெண்முத்தால் பல குடிசைகளும், பச்சை மரகதத்தால் கூடாரங்களும் உண்டு. அதன் சுற்று தோவளங்கள் சுகந்த கஸ்தூரியினாலும், அதன் சரள கற்கள் சிவந்த மாணிக்கம் முதலிய இரத்தினங்களாகவும் இருக்கின்றன. ஒவ்வோர் கூடாரத்திற்கும் நான்கு வாயல்கள் உண்டு. ஒவ்வொரு வாயலிலும் வெண்முத்திலாலான மரம் உண்டு. அதன் கொப்புகள் பொன் வெள்ளியினாலுமத், இலைகள் கனக புஷ்பராகத்தினாலும் இருக்கின்றன. அதன் புஷ்பங்கள் சந்திரனிலும் அழகு கனிகள் பனியிலும் வெண்மை, தேனிலும் இனிமை. வெண்ணெயிலும் மிருதுவானது.

அந்நதிக்கரையில் கெண்டிகளும், குவளைகளும், கூஜாக்களும் மழைத்துளிகளிலும் அதிகமாக வைக்கப்பட்டிருந்தன. ஆகாய நட்சத்திரங்களின் எண்ணிக்கைக்கு கலசங்களும் வைக்கப்பட்டிருந்தன. எவன் ஒருவர் அதிலிருந்து ஒருமிடர் குடிப்பானாயின் அதன்பின் எக்காலமும் அவன் தாகிக்கப் போறதில்லை.

இன்னும் அதில் வேறொரு அருவியும் பிறந்து ஒளிக்கக் கண்டார்கள். அதன்பேர் ரஹ்மத் எனப்படும். அவ்விரு நதிகளிலும் நாயகமவர்கள் குளித்தார்கள். ஆகவே அல்லாஹுதஆலா அவர்களின் முன்பின்னோர்களின் பாவங்களைப் பொறுத்தான்.

இன்னும் சுவர்க்கத்தில் கண்ணால் கண்டிராத, காதால் கேட்டிராத மனதால் நினைத்துப் பார்க்க கூட முடியாத அதியற்புதங்கையும், அதிசயங்களையும் கண்ணால் கண்டு களித்து அல்லாஹ்வை புகழ்ந்து நன்றி செலுத்தினார்கள்.

**சித்ரத்துல் முன்தஹாவில்...**

அதன்பிறகு சுவர்க்கத்தின் கடைசி எல்லையாகிய மகாம் "**ஸித்ரத்துல் முன்தஹா**" என்னும் இலந்தைமரம் வரை சேர்ந்தார்கள். அந்த மரமானது மிகவும் வலுப்பம் வாய்ந்தது. குர்ஸியின் கீழிருந்து அர்ஸென்னும் சுவனலோகத்தை அளவியதாய் இருக்கிறது. அதற்கு ஆயிரமாயிரம் பனர்களும் இ ஆயிரமாயிரம் இலைகளும் இ விரிந்து பாதாளம் வரையில் பரந்திருக்கின்றன.

இன்னும் அதற்கு அநேக கனிகளுமுண்டு. அதிலொரு கனியின் பேரில் எல்லா படைப்புகளும் கூடி புசித்த போதிலும் அல்லாஹ்தஆலாவின் உத்திரவினாலும், தத்துவத்தினாலும் அதிலிருந்து கொஞ்சம் கூட குறையாது. அதை பற்பல மகத்துவ ஒளிகளும், பரஞ்சோதி அகமிய திருஷ்டாந்தங்களும் பொதிந்திருக்கின்றன.

அவ்விடத்தில் ஜிப்ரீல் அவர்கள் தொழுகைக்காக பாங்கும், இகாமத்தும் சொல்லி நாயகத்தை முற்படுத்தினார்கள். அவர்கள் அல்லாஹுதஆலாவிற்காக இரண்டு ரகஅத்

தொழுதார்கள். பின்பு ஜிப்ரயீல் நாயகத்தை அழைத்துக் கொண்டு "**ஹிஜாபுல் அக்பர்**" என்னும் பெரிய திரையளவில் சென்றார்.

நாயகம் ஜிப்ரயீலே ! இதென்ன மகாம் என்று கேட்க அவர் அல்லாஹ்வின் மீது சத்தியமாக இந்த ஸ்தானத்தை இதற்குமுன் எக்காலத்திலும் நான் கண்டறியேன் என்றார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதனருகில் முன்னோக்கிச் சென்றதும்இ தங்களுக்குப் பின்னால் ஜிப்ரீலைக் காணவில்லை. அதனால் தங்களுக்கு கஷ்டம் ஏற்பட்டு, மனது திகிலடைந்து, எனது சகோதரரே! ஜிப்ரீலே! இவ்விதமான இடத்திலா எம்மை விட்டு பிரிந்து சென்றீர்கள் என்று கூறினார்கள்.

முஹம்மதே! உம்மை நபியாக அனுப்பின அல்லாஹ்வைக் கொண்டு சத்தியமாக ! இவ்விடத்தை விட்டு நான் ஒரு அங்குலமாவது கடந்தேனாகில் என்னுடைய ஆண்டவனுடைய ஒளியினால் கரிந்து போய்விடுவேன். மேலே ஏறுவதற்கு சக்தி பெறமாட்டேன் என்றார்கள். நாயகம் அவர்கள் ஜிப்ரீலை பிரிவதற்கான வெருட்சி ஏற்பட்டு சஞ்சலம் அதிகரிக்கவே ஜிப்ரீல் தமது அழகிய இறகினால் நாயகத்தை நெஞ்சுடன் சேர்த்து கட்டியணைத்து முஹம்மதே ! பயப்படாதீர். உம்மை இங்கு அழைத்துக் கொண்டவன் பரிபூரண கருணையாளன் . அவனே உம்மை சங்கையாக்குகிறான். அவனே உம்மை மகிமைப் படுத்துகிறான் . உம்முடைய தகுதியை மற்றெல்லா நபிமார்களுக்கு மேலால் கண்ணியப்படுத்துகிறான். இன்னும் உம்மை உலகத்தார்களுக்கு கருணையாக்கியிருக்கிறான் என்று கூறினார்கள்.

உடனே நாயகத்தின் திடுக்கம் நீங்கி மனதும் சாந்தமாயிற்று . அந்நேரம் அல்லாஹ்தஆலாவின் புறத்திலிருந்து சங்கையான எனது நண்பரே! வாருங்கள் என்று ஒரு திருவுளம் வெளியாயிற்று. உடனே ஜிப்ரயீல் நாயகத்தின் திருக்கரத்தைப் பிடித்து, ஙைப் - மறைவான ஒளியின் கடலில் ஒரேடியாய் அமிழ்த்தினார் . அதன்பயனாக நாயகம் எழுபதனாயிரம் திரைகளை ஊடுருவிச் சென்றார்கள் . ஒவ்வொரு திரையும் ஐநூறு வருடத் தொலைவாகும்.

அந்நேரத்தில் அவ்விடம் **ரஃப்ரஃப்** என்னும் ஒளிப்பிரகாசிக்கத்தக்கதாக பசும் பொருட்டில் வெளியாயிற்று. அதை வலுப்பமாகிய நான்கு பெரிய மலக்குகள் சுமந்து வந்து நாயகத்தின் சமூகத்தில் வைக்கவே அவர்கள் அதில் செவ்வையாக உட்கார்ந்து கொண்டார்கள். அதை அவர்களை சுமந்து கொண்டு பறந்து சென்றுஇ வெண்மையான ஒளியின் கடலிற் கொண்டு சேர்த்தது. பின்பு அங்கிருந்து சிவந்த கடலிலும் பின்பு மஞ்சள் கடலிலும் பின்பு கருங்கடலிலும் கொண்டு சேர்த்தது.

அப்பொழுது நாயகம் அத்தொட்டிலில் விழுந்து ஸுஜூது செய்தவர்களாக ஆண்டவனே! இரட்சிப்புத் தேடினோர்க்கு இரட்சகனே ! கார்மானம் கேட்போரின் காவலனே! எனது திடுக்கத்தைப் போக்கி இ வெறுட்சியை நீக்கு என பிரார்த்தனை செய்யவேஇ

அதற்கு மறுமொழியாக முஹம்மதே! முன்செல்லுமென ஒரு சப்தம் கேட்டது. அங்கு பார்க்கவே மீகாயீலெனும் மலக்கை பார்த்தா ர கள். அவர் கடலை அளந்து சகல கோணங்களிலும் மழை வரிசிப்பது கொண்டு பராக்குப் பூண்டவராயிருக்கிறார்.

அவர்களுக்கு சலாமுரைக்கவே அவர் மிக மரியாதை செய்து ஸலாமுக்கு பதில் கூறி இதுவே எனக்கு குறிப்பிட்ட ஸ்தானம். இங்கிருந்து ஒரு ஊசித்துவாரம் அளவேனும் நான் கடந்து செல்வேனாயின் குத்ரத்து தத்துவத்தின் ஒளியினால் நான் கரிந்து போவேன் என்றார்.

பின்பு நாயகம் மகத்தான முகர்ரபாகிய மலக்குகளின் அனேக வரிசைகளை ஊடுருவிச் சென்று இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாமைக் கண்டு அவருக்கு ஸலாம் கூறவேஇ அவர் வெகு சங்கையாக பதிலுரைத்து இதுவே எனக்கு குறிப்பிட்ட ஸ்தானம். இதைவிட்டு ஒரு ஜான் அளவாவது நான் முந்துவேனாயின் மகா வலுப்பத்தின் ஒளியினால் கரிந்து போவேன் என்றார்.

**அல்லாஹ்வின் அர்ஷ்...**

அவர் தமது தோள் புயத்தால் அர்ஷை சுமந்து கொண்டு சூர் என்னும் குழலை வாயில் கவ்வினவராய் அவருடைய இரு கண்களுக்குமிடையிலிருக்கும் “லவ்ஹுல் மஹ்பூல்“ என்னும் பலகையை ஓயாது கூர்ந்து நோக்கியவராய் இருக்கிறார் . அவர் முஹம்மதே! முன்னுக்குப் போய் உம் தலையை உயர்த்தும் என்றார் . நாயகம் உயர்த்திப் பார்க்கவே சகல சிருஷ்டிகளிலும் மகா அழகான அல்லாஹுதஆலா படைத்த வஸ்துக்களிலெல்லாம் வலுப்பமான அர்ஷைத் தரிசித்தார்கள் . *(முஹ்யித்தீன் இப்னு இர்ஜலி இமாம் அவர்கள் எழுதிய* ***தர்ஜுமா தப்ரீஜ் அல்-ஹாதிர் பீ மனாகிபிஷ் ஷெய்கு அப்தில் காதிர்*** *என்ற நூலிலிருந்து*

*ஜவாஹிருல் கலாயித் என்பவர் மஜ்மஉல் பலாயில் என்ற கிதாபில் வருவதைப் பற்றி சொல்கிறார்கள்: கௌதுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள் எமது பாட்டனார் நபி நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜில் சித்ரதுல் முன்தஹா தளத்தை எற்றிய நேரம் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இனி ஒரு அடி எடுத்துவைத்தால் நான் கரிந்து போவேன் என்று சொன்ன நேரம் அல்லாஹ்தஆலா அத்தளத்தில் எனது ரூஹை அனுப்பினான். என்னை புராக்கின் தலத்திலாக்கி என்*

*மீது எனது பாட்டனார் அவர்கள் ஏறிக் கொண்டு காப கவ்ஸைனிஅவ்அத்னா எனும் தலத்தில் ஏகினார்கள்.*

*அப்போது அவர்கள் சொன்னார்கள் , என் பிள்ளையே ! இது என் பாதம் . உமது தோள்மீது, உமது திருப்பாதம் அவ்லியாக்கள் அடங்களின் தோள் மீதும் என்றார்கள்.*

*அல்லாஹுடைய ஹபீபு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜிற்குப் போகும் இரவில் அன்பியாக்கள் , அவ்லியாக்கள் ரூஹ்களெல்லாம் எதிர்கொண்டழைக்க வந்தது. அப்பால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அர்ஷுக்கு முடுகியபோது அதை பாரதூரமாய் உயர்ந்ததாய் இருக்கக் கண்டு அதன் அளவில் ஏறிக் கொள்ள ஓர் ஏணி வேண்டுமே என்றிருக்கும்போது அல்லாஹ்தஆலா எனது ரூஹை அவர்கள் அளவில் அனுப்பினான். என் தோளை ஏணி வைக்கும் தளத்தில் வைத்தேன் . அவர்கள் இரு பாதத்தை எனது தோள் மீது வைக்க நாடியபோது என்னைக் குறித்து யார் ? என்று ஆண்டவனிடம் கேட்கவும் இல்ஹாமாச்சுது : இவராகிறவர் உமது பிள்ளை . அவர் நாமம் அப்துல் காதிர். நாம் உம்மைக் கொண்டு நபி பட்டத்தை முத்திரை இடாவிடில் உமக்குப்பின் அவர் அப்பட்டத்திற்கு தகுமாவார் என்று.*

*உடனே அல்லாஹ்வுக்கு சுகூர் செய்து எனது பாட்டனார் அவர்கள் சொன்னார்கள் , அருமை மகனே ! உமக்கே சோபனம் . என்னைக் கொண்டு எனது நிஃமத்தையும் பார்த்துக் கொண்டீர். இதுவும் உம்மைக் கண்டவர்கக்கும் கடண்டவரை கண்டவர்க்கும் கண்டவரை கண்டவர்க்கும் சோபனம் என்று இப்படி 27 தலைமுறை வரைக்கும் சொன்னார்கள். இன்னும் துன்யா ஆகிரம் இருபதியிலும் எனக்கு உம்மை மந்திரியாக ஆக்கிக் கொண்டேன் . எனது பாதத்தை உமது தோள் மீது வைத்தேன் . உம்மிருபாதமும் அவ்லியாக்கள் அடங்களின் புயங்களது மீதிலாயிருக்கும் . பெருமை அடிப்பதில்லை. வீறு பேசவில்லை. எனக்குப் பின் நபிப் பட்டம் இருக்கில் அதை நீர் பெறுவீர். எனக்குப் பின்னர் நபி கிடையாது என்றார்கள் . இதுவும் சங் கைகாழ் குருக்களின் கிதாபுகளில் சிலதில் பேசப்பட்டிருக்கிறது . இதுபோன்ற செய்திகள் பல்வேறு கிதாபுகளில் நக்ல் செய்யப்பட்டிருக்கிறது . இதனுடைய மொத்தத்தையும் காண நமது இணையதளமான www.sufimanzil.org ல் பதிவிறக்கங் கள் பகுதியில் புத்தகங்கள் தலைப்பில் இதர புத்தகங்கள் என்ற பகுதியின் கீழ் தர்ஜுமா தப்ரீஜ் அல்-ஹாதிர் பீ மனாகிபிஷ் ஷெய்கு அப்தில் காதிர் (https://sufimanzil.org/wp-content/uploads/bsk-pdf-manager/71_2015-06-03.PDF) என்ற பகுதியின் இணைப்பை கிளிக் செய்து பார்த்துக் கொள்ளவும்.)*

அவர்கள் அங்கிருந்து பார்க்கையில் வானம் பூமிகளிலுள்ள வஸ்துக்கள் அடங்களும் வெட்ட வெளியில் போடப்பட்ட ஓர் மோதிரம் போல் காணப்பட்டன.

அல்லாஹ் அந்த அர்ஷை முன்னூற்று அறுபது தூண்களுடையதாய் படைத்தான் . ஒவ்வொரு தூணும் சுற்றளவில் உலகத்தைப் போன்று ஒவ்வொரு தூணுக்குமிடையில் 500 வருடத் தொலைதூரமுண்டு . அவ்வர்ஷை ஒவ்வொரு நாளிலும் எழுபதினாயிரம் வர்ணங்களுடைய ஆடைஆபரணங்களால் அலங்கரிக்கப்படுகிறது.

அங்கு அந்த அர்ஷை சுமந்திருக்கும் எட்டு மலாயிகத்துமார்களையும் தரிசித்தார்கள் . அவர்களில் ஒருவருடைய அகங்கையானது வானம் பூமிகளை அடைக்கத்தக்க விசாலமுடையது. அவர்களுக்கு நாயகம் சலாமுரைக்கவே மிக சோபனத்துடன் அவர்கள் பதிலுரைத்தனர் . பின்பு அந்த அர்ஷுக்கு மேலாலிருந்து ஒரு கூப்பிடும் ஓசை கேட்டது. அதைப்பார்க்கையில் அவர் மகத்தான ஒரு மலக்கு. அவரது ஒளியின் பிரகாசத்தால் அர்ஷ் முதல் பாதாளம் வரை இலங்குகின்றது . அவருடன் அவருடைய கோலத்தில் இன்னும் எழுபதினாயிரம் மலக்குகள் இருந்தனர்.

நாயகம் அவர்கள் அவர்மீது சலாமுரைக்கவே , அவர் பதில் கூறி , நாயகத்தின் இரு புயங்களோடு கட்டித் தழுவி , முத்தமிட்டு நாயகமே ! என்னோடு நடங்கள் என்று அழைத்தார். நாயகம் அவருடன் நடந்துப் போகையில் வெண்முத்தினாலான 70000 திரைகள், பசும்பட்டிலான 70000 திரைகள், நவரத்தினங்களிலான 70000 திரைகளையும் ஊடுருவிச் சென்று பனிக்கட்டியின் திரைகள் ஜலாலிய்யத் என்னும் மகத்துவத் திரைகள், குத்ரத்தென்னும் தத்துவத் திரைகள் , பர்தானியத்தென்னும் தனித்துவ திரைகள், சமதானிய்யத் என்னும் பரிபூரணத் தத்துவத் திரைகள் , இஜ்ஜத் என்னும் மகிமைத் திரைகள் , வஹ்தானியத் தென்னும் ஏகாந்தத் திரைகள் இவ்வண்ணமாக பல்லாயிரம் திரைகளைக் கடந்து அப்பாலும் சென்றார்கள்.

அங்கே ஏகமாய் ஜொலித்திலங்கும் “நூரானிய்யத்“ என்னும் சுயஞ்ஜோதியின் மலாயிகத்துகள் 70000 பந்திவாசிகளை தரிசித்தார்கள் . அவர்களால் ஜீவராசிகளின் யாதொரு உணர்ச்சியாவது , ஊசாட்டமாவது கேளாமல் அடங்கியொடுங்கியிருந்தன . பின்பு ஒரு கூப்பிடுகிறவர் **“ஹிஜாபுல் அஃலமென்னும்“** மகா வலுப்பத்தின் திரையை உயர்த்துங்கள் என்று திருவுளம் பகர்ந்தார்.

### அல்லாஹ்வை புறக்கண்ணால் தரிசித்த முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

உடனே அல்லாஹுத்தஆலாவுக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குமிடையில் திரை நீக்கப்பட்டு அஹ்மதே முந்தும் , முடுகும் என அழைக்கப்பட்டது. ஒரு அடி எடுத்து வைத்தார்கள் . இந்த ஒரு அடியானது ஐநூறு வருட அடிப்பாடு கொண்டது. பின்பு இரண்டாவது முஹம்மதே உமது நாயன் அல்லாஹ்தஆலாவிடத்தில் நெருங்குமென கூப்பிடப்படவே ஓர் எட்டு வைத்து

நிறுத்திக் கொண்டார்கள். அன்னாருக்கு பயமும், திடுக்கமும் தோன்றவே மூன்றாம் முறையும் சிருஷ்டிகளில் நலவானரே ! திடுக்கம் வேண்டாம் . சிறப்பும், வலுப்பமுடைய அல்லாஹ்தஆலாவிடத்தில் நெருங்கி வாரும் என சொல்லப்பட்டது. தங்கள் மாட்சிமைக்குரிய நாயனிடத்தில் சமீபித்தார்கள். பின்பு அர்ஷின் ஒளியில் ஒரு துளியானது நாயகத்தின் நாவில் விழுந்தது . அல்லாஹுத்தஆலா நாயகத்தின் நாவை அது ரஹ்மானின் பயபக்தியினால் கொழுகப்பட்டிருக்க ையில் கட்டவிழ்த்துவிட்டான். அவர்களின் நெஞ்சை விரிவாக்கினான். கல்பு, ஹிருதயத்தை வெளிச்சமாக்கினான்.

முன்னோர், பின்னோர்களுடைய இல்மு அறிவுகளை அவர்களுக்கு அறிவித்தான் . அவர்களின் கல்பில் உலகத்தார் அடங்களுடைய அறிவுகளையெல்லாம் சேகரமாக்கி விட்டான்.

அப்பால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இன்னும் நெருங்கும் என்று அறிவித்தான் . நாயகம் இன்னும் நெருக்கி **"காபகவ்ஸைனி அவ்அத்னா"** என்னும் சமீப சமூக ஸ்தானத்தை அடைந்து அல்லாஹுத்தஆலாவின் சிருஷ்டிகளில் அவனது கற்பனையை எழுதும் மேலான கலம் எழுதுகோலின் ஓசையை கேட்குமளவில் அத்துணை நெருங்கின போது ஆண்டவனுடைய திருக்கருணை அமிர்தக் கடலின் மூன்று துளிகள் நாயகமவர்களை நோக்கி ஒளித்தன.

ஒன்று புயங்களின் சிறந்த புயத்தில் விஷயமாகி அவர்களுக்கு பயபக்தியை அளித்தது. மற்றொன்று அவர்கள் ஹிருதயத்தில் விழுந்து நேசத்தைக் கொடுத்தது . இன்னுமொன்று அவர்கள் நாவில் தரித்து, நாகரீகத்தை உண்டாக்கிற்று. இவ்விடத்தில் அமரர்களின் யாதுமொரு ஓசை , ஊசாட்டங்களையும் கேளாமல் ஒரே மௌனமாய் இருந்ததன் நிமித்தம் வானம் பூமியிலுள்ளவர்கள் எல்லோரும் மரணமாகிவிட்டார்களோ என்று எண்ணினார்கள். அவர்கள் உணர்ச்சியுமற்று மனது உள்பட உலக வஸ்துக்கடங்களும் தங்களை விட்டு மறைந்து போய்விட்டன.

எனவே அல்லாஹுதஆலா தனது சத்திய வாக்கியமாகிய குர்ஆன் ஷரீபில் முஹம்மதே! உம்மை விட்டும் உமது திரையை நீக்கினோம் . இன்று உமது பார்வையானது மிகக் கூர்மையுடையதாகும் என்ற சொல்லைக் கொண்டு நாயகம் அவர்களின் கண்ணொளியையும் பார்வைத் தெளிவையும் உறுதிப்படுத்தினான்.

ஆகவே சரியான சொற்படி தங்கள் ஆண்டவன் அல்லாஹ்தஆலாவை யாதொரு சந்தேகமுமின்றி தங்களின் சிரசின் இரு கண்களாலும் கண்டு பேரானந்தப் பரவசமடைந்தவர்களாக உடனே தங்கள் சிறப்பான புகழ்பெற்ற ஆண்டவனின் திருச்சமூகத்தில் ஸுஜூது செய்தார்கள்.

இதற்கு அத்தாட்சியாக எமது பாட்டனார் சதக்கத்துல்லாஹில் காஹிரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய வித்ரியா ஷரீபில் கூறுகிறார்கள்: நாயகம் அவர்கள் மிஃராஜில் தங்கள் பரிசுத்த தேகமும் , ஆன்மாவும் கண்விழித்திருக்கையிலே அல்லாஹ்தஆலாவைக் கண்டார்கள் என்று.

அன்னை ஆயிஷா நாயகி ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு பேதமிருப்பினும் பல்வேறு இமாம்கள் , மகான்களின் கூற்றுப்படி நாயகம் அல்லாஹுதஆலாவை பிரத்தியட்சமாக கண்டார்கள் என்பதே. இவ்வாறே இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இதை வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள்.

நாயகமவர்களை ரஹ்மானிய்யத்தின் தஜல்லியாத் கருணா கடாட்சத்தின் மேகமானது பொதிந்துக் கொண்டது. நூரானிய்யத்தென்னும் ஜோதி அவர்களை சூழ்ந்து கொண்டது.

அவர்களுக்குப் பின்னாலிருந்து ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குரல் ஒலித்தது. முஹம்மதே! இதோ நீரும் உமது நாயனும் , திட்டமாக அல்லாஹ் உமதுபேரில் நற்துதி செலுத்துகிறான். உம்முடன் பேசுகிறான். நீங்கள் அவனுடைய திருவாக்கியத்தை செவிசாய்த்துக் கேளுங்கள் . அவனுடைய கற்பனைக்கு வழிப்படுங்கள். அதன்பின்னால் யாதொரு கருமமும் உம்மை அச்சமுறுத்தாதிருக்குமாக எனக் கூறினார்.

**அல்லாஹ்வுக்கு அளித்த காணிக்கை...**

அல்லாஹுதஆலா நபி நாயகத்தை நோக்கி எம்மிடம் சிருஷ்டிகளில் மிக சிரேஷ்டமானவரே! மனிதரில் தெளிவானவரே ! நான் உம்மை எப்படி மகிமைப் படுத்தினேன். எவ்விதம் கண்ணியப்படுத்தினேன் , எமது சமஸ்தானத்திற்கு உயர்த்தினேன் என்பதை நீர் பாரும் . அதற்கு நன்றி, துதி முதலிய காணிக்கைகளை சமர்ப்பியுங்கள் என்றான்.

உடனே நாயகமவர்கள் "**அத்தஹிய்யாத்துல் முபாரக்காத்துஸ் ஸலவாத்துத் தையிபாத்து லில்லாஹி** " இந்த வரிசையான வணக்கங்களும் இ மணமான தொழுகைகளும் அல்லாஹ்வுக்கே உரியன என்று ஓதினார்கள்.

உடனே அல்லாஹுத்தஆலா **"அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு"** – நபியே! உம்மீது அல்லாஹ்வின் ஸலாம் என்ற ஈடேற்றமும் இ ரஹ்மத் என்ற கருணையும் , பரகத் என்ற பொலிலும் உண்டாவதகாக என்று அருளினான் . உடனே நாயகம் அவர்கள் **"அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன்"** – உனது ஸலாமானது எங்கள் மீதும், ஸாலிஹான நல்லடியார்கள் மீதும் உண்டாவதாக என்றார்கள்.

உடனே ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் , **“அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹி“** – திட்டமாக வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறில்லை . முஹம்மதானவர் அல்லாஹுத்தஆலாவின் திருத்தூதராயிருக்கும் என்று சாட்சி பகர்கிறேன் என்று ஓதினார்கள்.

**அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் நடைபெற்ற நேரடி உரையாடல்…**

பின்பு அல்லாஹுதஆலா நாயகத்தை நோக்கி எனது நண்பரே ! நீர் எம்மில் எல்லாப் படைப்புகளிலும் சிரேஷ்டமானவர் . எனக்கு மிகவும் உகப்பானவர் . நீர் நாடியதைக் கேளும் என்று திருவுளமானான்.

நாயகம் அவர்கள் ஆண்டவனே ! நீ ஆதமுக்கு மலக்குளைக் கொண்டு சாஷ்டாங்கம் செய்வித்தாய். அவரைத் தெளிவாக்கி சுவர்க்கத்தில் குடியேற்றி வைத்தாய் என்றார்கள்.

அல்லாஹுத்தஆலா முஹம்மதே! உமது தன்மையான சிறு அகமியத்தின் ஒளியானது அவர்மீது பிரகாசித்திராவிடின் நாம் ஆதமுக்கு சாஷ்டாங்கம் செய்யுங்கள் என்று மலக்குமார்களுக்கு சொல்லியிருக்க மாட்டோம் . நாடியதைக் கேளுங்கள் என்றான்.

நாயகம் ஆண்டவனே ! நூஹ் நபியையும் அவருடைய சமூகத்தினரையும் கப்பலில் இரட்சித்தாய் என்றார்கள். அவர் உமது அழகிய ஒளியைக் கொண்டு நம்மீது சத்தியம் செய்யாதிருந்தால் அவரும், அவருடனுள்ளோரும் வெள்ளத்தின் நாசத்தை விட்டும் ஈடேற்றம் பெற்றிருக்க மாட்டார்கள் என்று அல்லாஹ் சொன்னான். இன்னும் கேளும். கொடுக்கப்படும் என்றான்.

நாயகம் அவர்கள், நாயனே! நீ இப்றாஹீம் நபியைத் தோழனாக்கி அவரின் பதவியை உயர்த்தினாய். அவர்மீது நெருப்பை குளிர்ச்சியாக்கினாய் என்றார்கள் . அவர் உமது மகத்துவ நாமத்தை உச்சரித்து நம்மை அழைத்திராதிருப்பின் அவர் நம்ரூதுடைய நெருப்பை விட்டும் தப்பித்துக் கொண்டிருக்க மாட்டார் என்றான் அல்லாஹ். இன்னும் சொல்லும் கேட்கப்படும் என்று சப்தமுண்டாயிற்று.

நாயகம் அவர்கள் மூஸா நபியை வசனிக்கப்பட்டவராக்கி அவருடன் சம்பாசணை புரிந்தாய் என்றார்கள் . அல்லாஹுதஆலா எனதன்பிற் சிறந்தவரே ! அவர் நெருப்பளவில் இராவழி நடத்தப்பட்டார் . நீரோ மகாராஜாவான என்னளவில் மிஃராஜுக்கு நேர்வழிக் காட்டப்பட்டீர் . அவரோடு தூர்ஸீனா மலையில்

வசனிக்கப்பட்டிருப்பினும் நீர் மகத்துவ நாயனின் ஆஸ்தான விரிப்பில் நேர்மு வசனம் அருளப் பெற்றீர்.

இன்னும் மூஸா காட்சியை விரும்பினார் . எனினும் காண்க மாட்டீர் என சொல்லப்பட்டது. நீரோ எனது இராஜாங்க மாட்சியை கண்ணாற கண்டு களித்தீர் . இன்னும் நீர் வேண்டிக் கொள்ளும் நிறைவேற்றப்படுவீர் என்று உத்திரவு பிறந்தது.

நாயகம் என்னை ஆள்பவனே ! ஈஸா நபியை உனது பரிசுத்த ரூஹ் ஆவியைக் கொண்டு கெட்டிப்படுத்தினாய். அவர்கள் உனது உத்திரவினால் குஷ்ட ரோகிகளை சுகப்படுத்தினார். உனது திருநாமத்தினால் மரித்தோரை உயிர்ப்பித்தார்கள் . அல்லாஹ்தஆலா எனது நண்பரே ! நீர் பாவ நோய்களுக்கு பரிகாரியும் மரித்த இருதயங்களுக்கு உயிரளிப்போருமாகுமென சொன்னான். நாயகம் ஆண்டவனே ! எனது பாவியான உம்மத்து சமூகத்தினர்களில் என்னுடைய "**ஷபாஅத்து**" மன்றாட்டத்தை அங்கீகரித்தருள் என்றார்கள். அல்லாஹ்தஆலா எனது அன்பரே! நான் உமது நாட்டத்தை அங்கீகரித்தேன் என்றான்.

எனது சிறப்பு, வலுப்பத்தின் பேரில் ஆணையாக! அவர்கள் எனக்கு மாறு செய்தால் அதை மறைப்பேன். பிழைப் பொறுக்கத் தேடினால் மன்னிப்பளிப்பேன் . தவ்பா – பாவமன்னிப்புத் தேடினால் அங்கீகரிப்பேன். என்னைக் கூப்பிட்டால் பதிலுரைப்பேன். இன்னும் நான் அவர்களுக்கு செய்த குற்றங்களில் கருணை காட்டுவேன் . எனது பொருத்தத்தை அவர்களுக்கு நன்கொடை அளிப்பேன் . கியாமத்து நாளில் நீர் பொருந்தும் அளவுக்கு உமக்கு உமது நாயன் ஷபாஅத்து மன்றாட்டத்தை அருள்வான். யா முஹம்மது எனது திருநாமங்களில் ஒரு நாமத்தை உமக்கு வரிசையளித்தேன் . நீர் என்னை துதிப்பவர். நான் உமது துதிக்கப்பட்டவன். நீர் எனது சிநேகத்திற்குரியவர். நான் உம்மை சிநேகிப்பவன். உமது நாமத்தை எனது நாமத்தோடு சேர்த்தேன்.

எனது திக்ரு புகழுடன் உங்கள் புகழையும் மேலாக்கினேன் . எனது வானத்திலும் இ பூமியிலும் உம்மை என்னோடு துதிப்பதோடு அல்லாது என்னை துதிக்கப்படுவதில்லை. நீர் எனது சொந்த அடியார். எனது திருத்தூதர். திட்டமாக நான் மற்றெவரையும் உயர்த்தாத உச்சஸ்தானத்தில் உம்மை உயர்த்தினேன் . எனது திருக்காட்சியை உம் அல்லாதவரைத் தவிர்த்து உமக்கே சொந்தமாகத் தந்தேன் என்றருளினான்.

நாயகம் என்னுடைய ஆண்டவனே ! எனது உம்மத்து சமூகத்தினருக்கு பிழை பொறுத்தருள் என்றார்கள். அல்லாஹுதஆலா முஹம்மதே! நீர் காணவில்லையா? நான் அவர்கள் மீது எனது ரஹ்மத் - கிருபாகடாட்சத்தால் அவர்கள் பாவம் செய்யும் சமூகத்தினர் நான் பிழைபொறுக்கும் நாயனென எழுதிவிட்டேன் . இன்னும் உமது சமூகத்தினரில் எழுபதினாயிரம் பேர்களுக்கு பிழை பொறுத்தேன் என்றான் . நாயகம்

அவர்கள் நாயனே அதை இன்னும் அதிகப்படுத்து என்றார்கள் . அவர்களில் ஒவ்வொருவருக்கும் உமது சமூகத்தினரிலிருந்து எழுபதினாயிரம் பேரில் ஷபாஅத்து கொடுக்கப்படும் என்றான். நாயகம் ஆண்டவனே! இன்னும் அதிகப்படுத்து என்றார்கள். அல்லாஹுத்தஆலா தனது மகத்துவத்தின் திருக்கரத்தினால் மூன்று பிடி மண்ணெடுத்தான். ஒவ்வொரு பிடியின் கணக்கை மகா அறிவாலான அல்லாஹ்வையன்றி யாரும் அறியார். யா முஹம்மதே! உமக்காக இந்தக் கணக்கு மிகைப்படுத்தினேன் என்றான் . நாயகம் ஆண்வடனே ! உனக்கே என்றும் அழியாப்புகழும் கீர்த்தியும் என்று துதித்து நன்றி செலுத்தினார்கள்.

அதன்பின்னர் மாட்சிமைமிக்க அல்லாஹ் நாயகத்தை நோக்கி , முஹம்மதே! நீர் பூலோகத்திற்கு சென்று எனது அடியாருக்கு உமது ரிஸாலத்தை தெரிவியும் . எனது கட்டளைகளை அவர்களுக்கு அறிவியும் . அவர்கள் என்னைக் கொண்டு ஈமான் கொண்டு நல் அமல்கள் செய்வார்களாயின் அவர்களுக்கு நான் பிழைபொறுத்து கிருபை செய்வேன்.

கியாமத்துநாளில் சுவர்க்கப்பதியில் அவர்களுக்கு எனது திருக்காட்சி தருவேன் . இன்னும் அவர்கள் பதினான்காம் இரவில் பூரண சந்திரனைக் காணுவதைப் போல் மஹ்ஷர் வெளியில் என்னைக் காண்பார்கள் . எனது நேசரே! நான் உம்மீதும் உமது சமூகத்தினர் மீதும் ஒவ்வொரு இரவு , பகலிலும் ஐம்பது நேரத் தொழுகையை கடமையாக்கினேன். நீர் உமது சமூகத்தினிரிடம் சென்று இந்த தொழுகையை நியயமாக தொழுது வரும்படி தெரிவியும் என கட்டளையிட்டான்.

உடனே ரஃப்ரஃப் என்னும் பரமத் தொட்டிலானது நாயகத்தை சுமந்துக் கொண்டு உயர்ந்தும், தாழ்ந்தும் "சித்ரத்துல் முன்தஹா" வந்து சேர்ந்தது. அங்கு ஜிப்ரீலானவர் இவர்களின் வரவை எதிர்பார்த்து நின்றவராய் , முஹம்மதே! உமக்கு அல்லாஹ் நற்காணிக்கை புரிந்தான் . உமக்கு அவன் நன்கொடை அளித்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்தும் என்றார்கள்.

**ஐம்பது நேரத் தொழுகையை ஐந்து நேரமாகக் குறைத்தல்…**

பின்பு இருவரும் ஒவ்வொரு வானமாக இறங்கி நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை சந்தித்தார்கள். அவர்களிடம் நாயகம் அவர்கள் தமது சமூகத்தினருக்கு அல்லாஹ் 50 நேர தொழுகையை கடமையாக்கியதைப் பற்றி சொன்னார்கள்.

அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முஹம்மதே ! நீர் உமது நாயனிடம் திரும்பவும் போய் உமது சமூகத்தினருக்கு இந்த ஐம்பது நேரத் தொழுகையை குறைத்துக் கேளுங்கள் . ஏனெனில் உமது சமூகத்தினர் இதற்கு சக்தி பெற மாட்டார்கள் என்றார்கள்.

நாயகம் அவர்கள் மேலான நாயனிடம் சென்று "சித்ரத்துல் முன்தஹா" எனும் விருட்சத்தினிடம் தரிக்கவே மகத்தான ஓர் மேகமானது நாயகத்தை சூழ்ந்து கொண்டது. உடனே சாஷ்டாங்கம் செய்தவர்களாய் தமது சமூகத்திற்காக ஐம்பது நேரத் தொழுகையை குறைக்கச் சொல்லி வேண்டினார்கள். அல்லாஹ் ஐந்து அல்லது பத்து நேரத் தொழுகையைக் குறைத்தான் . திரும்பவும் வந்து மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அதைத் தெரிவிக்கவே மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திரும்பவும் குறைக்கச் சொல்லி அல்லாஹ்விடம் அனுப்பினார்கள். இவ்வண்ணமாக மூஸா நபிக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் போய்வந்ததன் பயனாக அல்லாஹ்தஆலா தினமொன்றுக்கு ஏற்படுத்தி ஐம்பது நேரத் தொழுகையையும் ஐந்து நேரத் தொழுகைகளாகக் குறைத்தான்.

அல்லாஹுத்தஆலா முஹம்மதே! ஒவ்வொரு நன்மையும் பத்து நன்மைக்கு சமமென்ற விகிதாச்சரப்படி ஒவ்வொரு நேரத் தொழுகையும் பத்து நேரத்திற்குச் சமமாகும். யாதொருவன் ஒரு நன்மையைக் கருதி அதைச் செய்யாவிடின் அவனுக்கு ஒரு நன்மை செய்த கூலி உண்டு. இன்னும் எனது கருணையினால் அதிகமாயும் கொடுப்பேன். யாதொருவன் ஒரு தீமையை நினைத்து அதைச் செய்யாதிருப்பின் அந்நினைப்பின் குற்றத்தை மன்னிப்பேன் . அதைச் செய்துவிட்டால் உரிய குற்றமெழுதப்படும். முஹம்மதே! எனது சிறப்பு வலுப்பத்தின் மீதாணையாக நான் அவர்களுக்கு பிழை பொறுப்பேன். அலட்சியம் செய்ய மாட்டேன். ஆதலால் எனது கட்டளையை பிறப்பித்து விட்டேன். எனது அடியாருக்கு இலேசு படுத்தினேன். எனது தீர்ப்பானது மறுக்கப்படுவதில்லை. எனது விதியை மாற்றப் போவதில்லை என சொல்லப்பட்டது.

அதன்பின்னும் குறைக்க மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள் . நாயகம் அவர்கள் அதற்கு நான் இனி நாயகனிடம் செல்வதற்கு வெட்கப்படுகிறேன் இ அவன் என்மீது விதித்த கற்பனையை புரிந்து கொண்டேன் என்று சொல்லிவிட்டார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிஸ்மில்லாஹ் சொன்னவர்களாக நாயகத்தை மரியாதையாக வழியனுப்பினார்கள்.

ஜிப்ரீல் நாயகத்தை முன் வானம்வரை கொண்டு சேர்த்தார். அப்பொழுது இரவானது அதன் நாழிகையில் ஓர் வினாடியேனும் கூடுதல் இ குறைவின்றி உரியபான்மையிலிருந்தது. இனி முன் வானத்தின் வாயில் திறக்கப்பட்டு இ ஓரொளியின் திரை உயர்த்தப்படவே அதன் பிரகாசத "தால் கீழே பூமியுடையோர்களைப் பார்த்தார்கள். பின்பு பைத்துல் முகத்தஸ் என்னும் பரிசுத்தப்பட்டணம் வந்து இறங்கியதும் இ புராக்கென்னும் வாகனமானது தாங்கள் பிரயாண அடையாளத்தோடு விட்டுப்போன இடத்தில் அப்படியே இருந்தது.

**மக்கா வந்தடைதல்...**

அதன்பின் நாயகம் புராக்கின் மீதேறி திருமைக்கா வந்து சேர்ந்தார்கள் . நாயகம் ஜிப்ரயீலே! இதுவிசயத்தில் என்னுடைய ஜனங்கள் என்னை உண் ம கொள்ளாது பொய்யாக்குவார்களே! என்றார்கள். ஜிப்ரயீல் முஹம்மதே ! இந்த விசயத்தை அபூஜஹ்ல் பொய்வித்தபோதிலும் உமக்கு நண்பரான அபூபக்கர் சித்தீக் உண்மைக் கொள்வாரென கூறி நாயகத்தை வழியனுப்பி விடைபெற்று சென்றார்.

நாயகம் வரும்வழியில் தங்கள் சிறிய தகப்பனார் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை சந்தித்தார்கள் . அவர் முஹம்மதே ! உமது விசயமென்ன ? என்று வினவினார். நாயகம், எனது சிறிய தந்தையே ! இன்றிரவு நான் மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸ் வரையிலும் அதிலிருந்து ஏழு வானமளவும் இரவில் பயணப்படுத்தப்பட்டேன். படைப்புகள் அடங்களின் அபூர்வ காட்சிகளை தரிசித்தேன் என முழு சரித்திரத்தையும் கூறினார்கள் . முஹம்மதே! உம்முடைய சமூகத்தினர் உம்மை பொய்யரென்பார்கள் . விசுவாசிக்காதவர்கள் இவ்விசயங்களை ஒருக்காலும் நம்பிக்கைக் கொள்ளமாட்டார்கள் . ஆதலால் குறைஷி வமிசத்தினருக்கு இவ்விசயத்தை சொல்லாதீர் என்றார்கள்.

நாயகம் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவனிடத்தில் நான் எடுத்திருக்கும் உறுதிமொழியைக் கொண்டு இதைப் பற்றி பேசியே தீருவேன் என்று கூறிவிட்டு சிறிய தந்தையார் மகள் உம்முஹானி ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டில் பிரவேசித்ததும் தங்கள் படுக்கை விரிப்பில் நித்திரையின் சூடு தணியாதிருக்கக் கண்டார்கள். உம்முஹானி அம்மையாரிடமும் தங்கள் முழு வரலாற்றையும் சொன்னார்கள்.

அதற்கு அவர்கள் அல்லாஹ்வின் தூதரே ! எமது தாயும் தந்தையும் உங்களுக்கே அர்ப்பணம். இவ்விசயத்தை குறைசி வம்சத்தினருக்கு சொல்லாதீ ர க்ள். அவர்கள் உம்மை பொய்யரென்பார்கள் . தங்களைக் கொண்டு நம்பிக்கைக் கொண்டவர்களும் ஒருசமயம் மாறி விடுவார்கள் என்றார்கள் . நாயகம் அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்களுக்கு எல்லா விசயங்களையும் சொல்லியே முடிப்பேன் என்றார்கள்.

அவர்கள் உண்மையில் விசுவாசம் கொண்டால் நல்லது . இல்லாவிடினும் நான் கவலைப்பட போவதில்லை என்று கூறி மஸ்ஜிதுல் ஹராமிற்குள் நுழைந்தார்கள் . அவர்கள் கண்ணில் அபூஜஹ்லே முதன்முதலில் தென்பட்டான் . அவன் அவர்களிடம் இன்று இரவு எதேனும் விசேசம் உண்டா? என்று பரிகாசமாய் கேட்டான்.

அதற்கு நாயகம் அவர்கள் மிஃராஜ் சென்ற விசயங்களை அவனுக்கு போதித்தார்கள் . இதை உமது சமூகத்தினருக்கு சொல்வீர்களா? என்று கேட்டான். ஆம் என்றார்கள்.

உடனே அபூஜஹ்ல் எழுந்து ஓ ! கஃபுப்னு லுஅய் உடைய மக்களே ! எல்லோரும் விரைந்து வாருங்கள் என உரக்க கூவியழைத்தான் . அது கேட்டவர்களெல்லாம் அதிசீக்கிரம் வந்து குழுமினார்கள். அபூஜஹ்ல் முஹம்மதே! இப்போது நீ கூறியதை ஒன்றுவிடாமல் இவர்களிடம் கூறும் என்று சொன்னான் . நாயகம் அவர்கள் மிஃராஜ் சென்றுவந்த விசயத்தை ஒன்றுவிடாமல் கூறினார்கள்.

இவையனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த அபூஜஹ்ல் முஹம்மதே ! தீர்க்கதரிசிகளில் யார் யாரைக் கண்டீர்? என்று கேட்கவேஇ அதற்கு நாயகம் அவர்கள் இப்றாஹீம், மூஸா, ஈஸப்னு மர்யம் அலைஹிமிஸ்ஸலாம் முதலியவர்களைக் கண்டேன் என்றும் அவர்களின் குணம் , குறிகளையும், இலட்சணங்களையும் வர்ணித்துக் கூறினார்கள். அபூஜஹ்ல் எங்கள் ஆசாமிகளில் யாரை கண்டீரென்றான் . நாயகம் அவர்கள் இம்ரானுப்னு ஜுன்துபை கண்டேன். அபூஜஹ்லே! அவன் உன்னை போன்று குள்ள மனிதன். எரிநரகில் வேதனைப் படுகிறான் என்றார்கள்.

**சித்தீகுகளின் நாயகம்...**

இதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சிலர் நம்பியும் , சிலர் நம்பாமலும் எழுந்து அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்று அபூபக்கரே ! உமது தோழர் முஹம்மது இன்றிரவு பைத்துல் முகத்தஸ் வரை சென்று பின் ஏழு வானங்களைக் கடந்து மக்கா வந்துவிட்டார் என்று சொல்கிறார் என்றனர்.

அப்போது நாயகம் அவர்கள் அவ்வாறு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்தார்களா ? அப்படி அறிவித்தால் திட்டமாக அவர்கள் அல்லாஹ் தஆலாவுடைய திருத்தூதரென்று சாட்சிக் கூறுகிறேன் என்றார்கள் . அதன்பின் அபூஜஹ்ல் முஹம்மதே ! நீர் பைத்துல் முகத்தஸைப் பற்றிய அடையாளங்களை எங்களுக்கு வர்ணியுமென்று கேட்டபோது , நாயகம் அப்படியே சிலதை வர்ணித்து வரும்போது அவர்களுக்கு அல்லாஹுத்தஆலா பைத்துல் முகத்தஸை கண்முன் வெளியாக்கினான். நாயகம் அக்கூட்டத்தினரை நோக்கி அதன் ஒவ்வொரு அம்சங்களையும் உறுப்பினங்களையும் விரித்துரைத்தார்கள்.

பின்பு, அவர்கள் தங்கள் யாத்திரைக்காரர்களைப் பற்றிக் கேட்கவே நான் இன்னின்ன கிளையாரின் யாத்திரைக்காரரோடு சென்றேன் . அவர்களின் ஒட்டகை வழித்தப்பிப் போயிற்று. நான் அவர்களுக்கு துப்பறிவித்தேன் . இன்னும் அவர்களிடம் தண்ணீர் இருந்தது. நான் தாகத்தை தீர்த்துக் கொள்வதற்காக வாங்கிக் குடித்துவிட்டு கெண்டியை அங்கேயே போட்டு விட்டேன் . நீங்கள் அது விசயத்தைப் பற்றி அவர்களிடம் கேட்டறிந்து கொள்ளலாம் என்றார்கள் . அவர்கள் அவ்வாகனக்காரர்கள் இங்கே எப்போது வருவார்கள் என கேட்டதற்கு நாயகம் சூரியன் உதிக்கும்போது என்றார்கள்.

அதுபோல் அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தனர். அந்த யாத்திரிகர்கள் வரும்வரை அல்லாஹ் தஆலா சூரியனை தடுத்து வைத்திருக்கையில் ஒரு மனிதன் இதோ சூரியன் உதித்து விட்டதென்றான் . மற்றொருவன் இதோ யாத்திரீகர்கள் வந்து விட்டனர் என்றான் . இதனால் சில ஜனங்கள் ஈமான் நன்னம்பிக்கை கொண்டவர்களாய் இது உண்மையான முஃஜிஸாத் - அதிஅற்புதமென்றார்கள்.

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களின் சொல்படி அவ்விதம் சமூகமானவர்களில் ஈமான் நன்னம்பிக்கைக் கொண்டோர் 4000 பேர்களாகும். சித்தீகுல் அக்பர் அவர்கள் நாயகமே நீங்கள் உண்மை சொன்னீர்கள் என்றார்கள்.

நாயகம் அவர்கள் அபூபக்கர் சித்தீக் அவர்களை நோக்கி நீங்கள் சித்தீகுல் அக்பர் என்றனர். அல்லாஹ்விடமிருந்தும் திருவுளம் வந்தது . அல்லாஹ்வுக்கும், ரஸூலுக்கும் வழிபட்டால் அவர்கள் நபிமார்கள் , சித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் என்னும் நல்லடியார்களுடனிருப்பார்கள் . அதுவே அல்லாஹுதஆலாவின் திருவரிசைக் கொடையாகும்.

**வல்ல நாயன் நம் அனைவருக்கும் நம் நாயகம் முஹம்மது முஸ்தபா அஹ்மது முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொருட்டால் அனைத்துவித நற்பாக்கியங்களையும் தந்தருள்வானாக. ஆமீன். ஆமீன். யாரப்பல் ஆலமீன். ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.**

*முற்றும்.*

***குறிப்பு:*** ***இதன் ஆன்மீக விளக்கத்தை அறிய அகமியக் கண்ணாடி என்ற ஆன்மீக நூலை நோட்டமிடுக . இதன் லிங்க்*** *https://sufimanzil.org/wp-content/uploads/bsk-pdf-manager/45_2015-06-02.PDF*

www.